விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை (28.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 314




# கிளிநொச்சியில் இருப்பவர்கள் விடுதலைப்புலிகள் மட்டுமே!

## பசில் எம்.பி. புதுடில்லியில் தெரிவிப்பு

(புதுடில்லி)

கிளிநொச்சியில் பொதுமக்கள் இல்லை. அங்கிருப்பவர்கள் விடுதலைப்புலிகள் மட்டுமே. இதைவிட வைத்திய சாலையைத் தவிர வேறெந்த அரச அலுவலகங்களும் இயங்கவில்லை என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ புதுடில்லியில் தெரிவித்துள்ளார். *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்ட நெடுமாறன் வேண்டுகோள்

(சென்னை)

அனைத்துக் கட்சிக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியிடம் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பழ.நெடுமாறன் நேற்றுத் திங்கட்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் சகோதரருமான பசில் ராஜபக்ஷ டில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசிய பிறகு அதன் தொடர்ச்சியாக பிரணாப் முகர்ஜி சென்னையில் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் *(10 ஆம் பக்கம்பார்க்க)*

## அம்பாறையில் தாக்குதல்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினரை தமிழீழவிடுதலைப் புலிகள் வழிமறித்து நடத்திய தாக்குதலில் அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர். இது தொடர்பில் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் ஊடுருவல் நடவடிக்கையினை மேற்கொண்ட சிறப்பு அதிரடிப்படையினரை நேற்று பிற்பகல் 12.50 மணியளவில் விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தினர். இதில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர் என்று விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர். (ச-5)

# இலங்கை நிலைவரம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

## கேள்வி எழுப்புகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை - இந்தியக் கூட்டறிக்கை தெளிவற்றதாக இருக்கின்றது.

இராணுவத் தீர்வா? அல்லது சமாதானப் பேச்சுவார்த்தையூடான அரசியல் தீர்வா? என்பதை இலங்கை அரசாங்கம் பகிரங்கப் படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

'அத்துடன் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் யுத்தம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது குறித்தும் அதில் தமிழக முதல்வரின் நிலைப்பாடு குறித்தும் விளக்க வேண்டும் என்றும் ஐ.தே.க. சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.கவின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இங்கு மேலும் கூறுகையில்,

தேசிய இனப்பிரச்சினை இன்று உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. இதில் இந்தியாவின் தலையீடுகளும் இலங்கை அரசாங்கத்துக்குப் பல *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கை தமிழர்களுக்கு உதவுமாறு தமிழக முதல்வர் வேண்டுகோள்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு நிதி மற்றும் பொருளுதவி செய்யுமாறு தமிழக மக்களை முதல்வர் கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.

உதவிகளை வழங்குவோர் தங்கள் மாவட்ட ஆட்சியரிடம் அவற்றை வழங்கி உரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழுத் தமிழர்களுக்கு இந்தியா 800 தொன் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை வழங்க இலங்கை அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

அதன்படி இந்தப் பொருள்களைச் சேகரிக்க முதல்வர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். கருணாநிதியின் அறிவிப்பை அடுத்துத் தமிழக மக்கள் தமது உதவிகளை மேற்கொண்டு *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## இலகு ரக இராணுவ தளபாடங்களையே இலங்கைக்கு இந்தியா வழங்கி வருகிறது

### என்கிறார் பிரணாப் முகர்ஜி

(புதுடில்லி)

ராடர் கருவிகள் உள்ளிட்ட இலகுரக இராணுவத் தளபாட உதவிகளே இலங்கைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் எந்தப் பயிற்சியும் அளிக்கப்படவில்லை என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதுவர் பசில் ராஜபக்ஷ எம்.பி. மற்றும் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியுடன் நேற்று முன்தினம் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தி மத்திய அரசுக்கும் தி.மு.கவிற்கும் இடையில் நிலவிய முறு *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# இந்தியாவின் தலையீடு இல்லாமல் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வில்லை

## இரா.சம்பந்தன் செவ்வி


(கொழும்பு)

இந்தியாவை ஒதுக்கி வைத்து ஈழத் தமிழர் பிரச்சினைக்கு என்றுமே தீர்வில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுவிஸிலிருந்து வாரம் இருமுறை வெளிவரும் நிலவரம் ஏட்டுக்கு அவர் அளித்த நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது;


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நடவடிக்கை என்ன?

வன்னியில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக மக்களுக்கு ஏற்படுகின்ற அழிவுகள், இழப்புக்கள், உயிர்ச் சேதங்கள், தொழில் இழப்புக்கள், குடிப்பெயர்வுகள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக நாங்கள் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு மட்டங்களில் குரல் கொடுத்து வந்திருக்கின்றோம். *(10 ஆம் பக்கம் பார்க்க)*



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆட்டமிழப்பெனத் தெரிந்தும் வீண் சர்ச்சை கிளப்பிய சைமண்ட்ஸ்



(மெல்போர்ன்)

சிட்னி டெஸ்ட் போட்டியில் 'ஆட்டமிழப்பு எனத் தெரிந்ததும், சைமண்ட்ஸ் தானாக வெளி யேறியிருக்க வேண்டும். இதை செய்யாததால் வீண் சர்ச்சைகள் உருவாகின. அவுஸ்திரேலிய அணி, விளையாட்டு உணர்வுடன் ஆடுவதில்லை என்ற எண்ணமும் ஏற்பட்டது' என சகவீரர் சைமண்ட்ஸ் பற்றிக் கடுமையாக விமர்சித்துள்ளார் கில்கிறிஸ்ட்.

இந்தியா,அவுஸ்திரேய அணிகள் மோதிய சிட்னி டெஸ்ட் இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடந்தது. இப்போட்டியில் நடுவர்கள் தவறு, ஹர்பஜன்- சைமண்ட்ஸ் மோதல் என நிறையப் பிரச்சினைகள் வெடித்தன. இது தொடர்பாக 'ட்ரூ கலர்ஸ்' என்ற தனது சுயசரிதையில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் கில்கிறிஸ்ட் குறிப்பிட்டுள்ளார்.

இதில் சச்சினின் நேர்மை பற்றி இவர் கேள்வி எழுப்பியது பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியது. இதற்காக கில்கிறிஸ்ட் மன்னிப்புக் கேட்டார். இந்தச் சூழலில் தனது சுயசரிதையில் இன்னொரு குண்டை தூக்கிப் போட்டுள்ளார். இம்முறை சிட்னி டெஸ்டில் சக வீரர் சைமண்ட்ஸ் நடத்தை பற்றி விமர்சித்துள்ளார். ஆட்டமிழப்பு எனத் தெரிந்தும் வெளியேறாத இவரது செயல் பற்றிக் கண்டித்துள்ளார்.

இதுபற்றி கில்கிறிஸ்ட் எழுதியிருப்பதாவது, அவுஸ்திரேலிய அணி சார்பாக சிட்னி டெஸ்டில் பங்கேற்றது மறக்கமுடியாத அனுபவம். இப்போட்டியில் நடுவர்கள் சிறப்பாகச் செயல்படாதது கவலை அளிப்பதாக இருந்தது. இந்திய இளம் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா வீசிய பந்து, சைமண்ட்ஸின் துடுப்பில் பட்டுச் சென்றது. ஆனால் நடுவர் ஆட்டமிழப்பு தரவில்லை. இதைப் பயன்படுத்திக் கொண்ட சைமண்ட்ஸ் சதம் அடித்தார். பின்னர் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், தனது துடுப்பில் பந்து பட்டதாகவும், நடுவர் கருணையால் தான் சதம் அடிக்க முடிந்தது எனவும் வெளிப்படையாக கூறி வெறுப்பேற்றினார்.

இப்போட்டி முடிந்ததும் மைதானத்தில் விளையாட்டு உணர்வுடன் பங்கேற்ற ஒரே அணி இந்தியா தான் என்று டெஸ்ட் அணித் தலைவர் கும்ளே விமர்சித்தார். இதற்கேற்ப சைமண்ட்ஸ் தனது 'ஆட்டமிழப்பு' குறித்து வெளிப்படையாக பேட்டி அளித்தது, அவுஸ்திரேலிய வீரர்கள் விளையாட்டு உணர்வில்லாமல் செயல்படுவதை நிரூபிப்பதாக அமைந்தது. சிட்னி டெஸ்ட்டில் அணித் தலைவர் பொன்டிங் துடுப்பில் பந்து உரசிச் சென்றது. அப்போது நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்கவில்லை.பின்னர் ஹர்பஜன் பந்தில் தவறான முறையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழப்புக் கொடுத்தார். கடந்த 2004 இல் அவுஸ்திரேலிய அணியின் தற்காலிக தலைவராக இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.

**தவறாக நினைத்து வெளியேறினேன்**

எனது கொள்கையின்படி 'அவுட்' எனத் தெரிந்தால் வீரர்கள் தானாக வெளியேற வேண்டும் என்று யாரையும் வற்புறுத்தவில்லை. எனது இந்தக் கொள்கைக்கு சக வீரர்களிடம் எப்போதும் ஆதரவு இருந்ததில்லை. டெஸ்ட் போட்டி ஒன்றில் சக அவுஸ்திரேலிய வீரர் மைக்கெல் கஸ்பரோவிச் ஆட்டமிழந்தபோது, நடுவர் முடிபை அறிவிக்கும் முன்பாக மைதானத்தை விட்டுச் சென்றுவிட்டார். இதனால் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தோம்.பின்னர் நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்ததாக தவறாக நினைத்து வெளியேறினேன் என்று கூறி அதிர்ச்சி அளித்தார். வீரர்கள் நியாயமான முறையில் நடந்து கொண்டால் நடுவர்கள் தவறான தீர்ப்புகள் அளிப்பது வெகுவாகக் குறையும். இவ்வாறு அதில் கில்கிறிஸ்ட் குறிப்பிட்டுள்ளார். (5)

# பாக். பயிற்சியாளராக இன்திகாப்

(கராச்சி)

பாகிஸ்தான்அணியின் புதிய பயிற்சியாளராக முன்னாள் வீரர் இன்திகாப் ஆலம் நியமிக்கப்பட்டுள்ளார்.பாகிஸ்தான்கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவின் ஜெப்லாசன் இருந்தார். இவரது செயல்பாடுகள் திருப்தி அளிக்காததால் அதிரடியாக நீக்கப்பட்டார்.அடுத்து பயிற்சியாளர் பதவிக்கு முன்னாள் வீரர்களான ஜாவித் மியாண்தத்,அமிர் சோகைல், இன்திகாப் ஆலம் ஆகியோரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. இறுதியில் புதிய பயிற்சியாளராக இன்திகாப் ஆலம் தேர்வு செய்யப்பட்டார். சிறந்த சகலதுறை வீரரான இவர் 47 டெஸ்ட், 4 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். 1992-ல் உலக கோப்பை வென்ற பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக இருந்த பெருமை மிக்கவர்.



பின்னர்2000ஆம்ஆண்டு பயிற்சியாளர் பொறுப்பு வகித்த இவர், இலங்கை தொடரின் போது நீக்கப்பட்டார். மீண்டும் பயிற்சியாளராகநியமிக்கப்பட்டுள்ள 66 வயதான இன்திகாப் ஆலம் கூறுகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) தலைவர் இசாஜ் பட் இரண்டு ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பயிற்சியாளூராகசெயல்படுமாறுகேட்டுக் கொண்டுள்ளார்.இதுசவால் நிறைந்த பணி. அணிவீரர்களிடையேஒழுக்கத்தை ஏற்படுத்துவது என்னுடைய முக்கிய நோக்கமாக இருக்கும் என்றார்.இது குறித்து இசாஜ் பட் கூறுகையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கு பாகிஸ்தானின் பயிற்சியாளராக இன்திகாப் இருப்பார். நீண்டகால ஒப்பந்த அடிப்யபடையில் பயிற்சியாளரை நியமிப்பது பற்றி ஆலோசித்து வருகிறோம் என்றார். (5)

# பெண்கள் டென்னிஸ் தரவரிசையில் இவ்வாண்டு இறுதிவரை ஜான்கோவிச் நம்பர் -1

சர்வதேசப் பெண்கள் டென்னிஸ் தரவரிசையில் ஆண்டிறுதிவரை ஜான்கோவிச் 'நம்பர்-1' இடத்தில் நீடிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஜான்கோவிச்**

சர்வதேச பெண்கள் டென்னிஸ் தரவரிசையில் 'நம்பர் -1' இடம் இந்த ஆண்டு ஊசலாட்டமாகவே இருந்து வந்தது. பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் (20 வாரம்) திடீரென ஓய்வு பெற்றதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது. அவருக்கு பின்னர் செர்பியா வின் இவானோவிச் (12 வாரம்), ரஷ்யாவின் ஷரபோவா (3வாரம்), அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ்(4வாரம்) ஆகியோர் முதலிடத்தில் ஏறி இறங்கினார்கள்.

இறுதியாக 23 வயதான செர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச் முதலிடத்தைப் பிடித்தார். ஏற்கனவே ஒருவாரம் மட்டும் நம்பர் -1 ஆக இருந்த ஜான்கோவிச், 2ஆவது முறையாக அரியணையில் ஏறி ஒக்டோபர் 6ஆம் திகதி தொடர்ந்து நீடித்து வருகிறார்.

**தொடர்ந்து நீடிப்பார்**

இருப்பினும் அடுத்த மாதம் நடைபெறும் சொனி எரிக்சன் சம்பியன்ஷிப் போட்டியின் முடிபை பொறுத்து நம்பர்-1 இடம்மாறலாம் என்ற சூழல் இருந்தது.

இந் நிலையில் இந்த ஆண்டு இறுதிவரை ஜான்கோவிச் முதலிடத்தில் நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான புள்ளிகளைஅவர் பெற்று விட்டார். அவர் மொத்தம் 4ஆயிரத்து555 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். 2ஆவது இடத்தில் உள்ள ரஷ்யாவின் டினரா சபீனா 3ஆயிரத்து 782 புள்ளிகளும், செரீனா வில்லியம்ஸ் 3 ஆயிரத்து 716 புள்ளிகளும் பெற்று உள்ளனர்.

தொடர்ந்து 12 ஆட்டங்களில் வென்றுள்ள ஜான்கோவிச், சீன ஓபன், ஜெர்மனியின் போர்ஸ்சி கோப்பை, கிரம்ளின் கோப்பை ஆகிய பட்டங்களை கைப்பற்றியதே இன்னும் 2 மாதம் அவர் முதலிடத்தில் நீடிக்க உதவியிருக்கிறது.

**மகிழ்ச்சி**

இதுகுறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஜான்கோவிச் மேலும் கூறுகையில், இந்த ஆண்டு உண்மையிலேயே எனக்கு ரொம்ப வியப்புக்குரியதாக அமைந்துள்ளது. கடுமையாக உழைத்ததன் பலனாக நம்பர்-1 இடத்தை பிடித்திருக்கிறேன். தொடர்ந்து முதலிடத்தில் நீடிப்பேன் என்று நம்புகிறேன் என்றார்.

பெண்கள் தரவரிசையில் முதலிடத்தை பிடித்தாலும், ஜான்கோவிச் இன்னும் ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் கூட வென்றதில்லை. அமெரிக்க ஓபன் டென்னிஸில் இறுதிப் போட்டிவரை முன்னேறிய ஜான்கோவிச், செரினாவிடம் பட்டவாய்ப்பை இழந்தார் இந்த ஆண்டில் அவர் இதுவரை 63 ஆட்டங்களில் வெற்றியும்,17 ஆட்டங்களில் தோல்வியும் கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் தரவரிசையில்,ஸ்பெயின் வீரர் ரபெல்நடாலே இந்த பருவகால இறுதிவரை முதலிடத்தில் நீடிப்பார் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (5)

# ஹொங்கொங் சிக்ஸர்ஸில் ஜெயசூரிய

ஹொங்கொங் சிக்ஸர்ஸ் தொடரில் நட்சத்திர அணிக்கு விளையாட இலங்கை அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரிய தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஹொங்கொங் சிக்ஸர்ஸ் தொடர்அடுத்த மாதம்8,9ஆம்திகதிகளில்நடைபெறவுள்ளது. இதில் உலக அரங்கில் முன்னணி கிரிக்கெட் வீரர்களை கொண்ட நட்சத்திர அணியும் பங்கேற்கவுள்ளது.இதில்இலங்கை வீரர் சனத் ஜெயசூரிய விளையாடவுள்ளார். ஜெயசூரியவுடன் மேற்கிந்தியதீவுகளின் ஷிவ்னாரின் சந்தர்போல், அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஜஸ்டின் லாங்கர், நியூஸிலாந்து அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீபன் பிளமிங் மற்றும் இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் மதிவ் ஹோகார்ட் ஆகியோரும் நட்சத்திரஅணியில்இடம்பிடித்துள்ளனர்.



இந்த தொடரில் நட்சத்திர அணியுடன் போட்டியை நடத்தும் ஹொங்கொங், அவுஸ்திரேலியா, இலங்கை, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும்பாகிஸ்தான்அணிகள் பங்கேற்கின்றன. இதில் நடப்பு சம்பியன் இலங்கை இந்திக்க டி சேரம் தலைமையில் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# இலங்கை அணியுடனான தொடர்களை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியது!

(புதுடெல்லி)

இலங்கை அணிக்கு எதிரான வருங்கால போட்டித் தொடர்களை தற்காலிகமாக ஒத்திப் போடவைக்க இந்திய கிரிக்கெற் சபை முடிவு செய்துள்ளது.

**ஐ.பி.எல்.சர்ச்சை**

இந்திய கிரிக்கெற் சபையால் நடத்தப்படும் இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்)இருபது-20 கிரிக்கெட்தொடர் அடுத்த ஆண்டு (2009) ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் நடக்கிறது.

இந்த தொடர் நடைபெறும் காலத்தில் இலங்கை அணி இங்கிலாந்து சென்று விளையாட உள்ளது.ஐ.பி.எல் போட்டியில் இலங்கை வீரர்கள் பலர் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருப்பதால் இலங்கை கிரிக்கெட் சபை என்ன முடிபு எடுப்பது என்பது தெரியாமல் குழம்பியது. இந்த பிரச்சினையில் சர்ச்சை கிளம்பியது.

**ரகசியம் வெளியானது**

இந்த ஐ.பி.எல் போட்டியில் இலங்கை வீரர்கள் கலந்து கொள்வதன் மூலம் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் பிரச்சினை ஏற்பட்டால் அதனால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கை கிரிக்கெட் சபைக்கு சுமார் ரூ.200 கோடிஅளிக்க இந்திய கிரித்கெட் சபைமுன்வந்தது. இது குறித்து இருநாட்டு கிரிகெட் சபை நிர்வாகிகள் இடையே நடந்த ஆலோசனை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த ஆலோ சனை கூட்டத்தில் இந்திய கிரிக்கெட் சபை சார்பில் லலித் மோடி,நிரஞ்சன்ஷா ஆகியோரும் இலங்கை கிரிக்கெட் தரப்பில். சித்தார்த் வெட்டிமுனியும் கலந்து கொண்டனர்.

ரகசியமாக நடந்த இந்த பேச்சுவார்த்தை விபரத்தை இலங்கை கிரிக்கெட் சபை வெளிப்படையாக தெரிவித்தது இந்திய கிரிக்கெற் சபை நிர்வாகிகளுக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியது.

அத்தோடு முன்னாள் அணித்தலைவர் ரணதுங்கா, இந்தியா கிரிக்கெட் சபை, இலங்கை கிரிக்கெட்டை வாங்க முயற்சிக்கிறது என்று விமர்ச்சித்து இருந்தார். இங்கிலாந்து தொடரை ரத்து செய்யக் கூடாது என்று ஐ.சி.சியும் கண்டித்து இருந்தது.

**தொடரை நிறுத்த முடிபு**

இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகிகள் நம்பிக்கைக்கு பாத்திரமாக செயல்படாததால் அதிருப்தி அடைந்த இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் இலங்கை அணிக்குஎதிரான இந்திய அணியின் போட்டி தொடர்களை நிறுத்தி வைப்பது என்று தற்காலிகமாக முடிபு செய்துள்ளனர். (5)

# இன்று ஒரு தகவல்

## மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதியில் ஏகப்பட்ட கூட்டம். அங்கு இயேசு நாதர் பேசிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர் பிரமாண்டமான துலாக்கோல் ஒன்றினை அந்த மக்களுக்கு காட்டினார்.

அப்படி ஒரு தராசை ஒரு போதும் அந்த மக்கள் அதற்கு முன் கண்டதில்லை.

இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அந்தத் தராசில் வைத்து எடைபோடுகிறார் அவர்.

அதன் ஒரு பக்கத்தில் கண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் வைக்கிறார். மலைச் சாரலில் வளர்ந்த ஒலிவ் மரங்கள் ,மலையடி வாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆட்டு மந்தைகள், விலை யுர்ந்த பொருட்கள் எல்லா வற்றையும் அதில் வைக் கிறார்.

இதையெல்லாம் எல்லோரும் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றைய தட்டத் தில் வைப்பதற்கு ஒன்றும் இல்லையே என்று பேசிக் கொண்டார்கள்.

உலகத்திலுள்ள எல்லாவற்றையும் ஒரு தட்டில் வைத்தாயிற்று. அவ்வளவையும் ஈடு கட்டும் அளவுக்கு அடுத்து தட்டில் என்னதான் வைக்க முடியும்?

எல்லோரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசு நாதர் சுற்று முற்றும் பார்த்தார். பக்கத்தில் இருந்த ஒரு சின்னக் குழந்தையைத் தூக்கி வலது பக்கத் தட்டில் வைக்கிறார். அவ்வளவு தான்!

இடப் பக்கத் தட்டு மெதுவாக மேலே போக ஆரம்பித்தது. அதில் இருக்கும் பொருட்கள் எல்லாம் விழுந்து விடுமோ என்று நினைக்கும் அளவுக்கு இருந்தது.

எல்லோருக்கும் ஒன்றும் புரியாமல் இயேசு வெருமானின் முகத்தைப் பார்க்கிறார்கள். அதற்கு அவர் சொல்கிறார்.

“ஒருவன் தனது ஆன்மாவுக்குக் கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயன் என்ன? ஒருவன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்?” என்கிறார்.

இந்த உலகத்தில் இருக்கும் எல்லாவற்றையும் விட அதிக விலையுயர்ந்தது மனிதனின் ஆன்மாதான் என்பதை இந்தச் சம்பவம் மூலம் அவர் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

இன்று நாம் படும் கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

மனிதனின் மதிப்பை மனிதன் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை ,அது தான் காரணம்.

இப்பொழுது உலகத்தில் நடக்கும் சம்பவங்களையெல்லாம் பார்த்தால் மனித உயிர் அற்பமாகப் போய் விட்டதே என்ற எண்ணம் தான் தோன்றுகிறது!

சமீபத்தில் பத்திரிகையில் ஒரு நகைச் சுவைத் துணு க்கு பார்த்தேன்.

ஒருராஜா காட்டுக்கு வேட்டையாட போய் விட்டு திரு ம்பிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவரோடு கூட வந்தவர்களிடம் விசாரிக்கிறார்.

“அமைச்சர் இருக்கிறாரா?” என்கிறார் ராஜா.

“இதோ இருக்கிறேன்!” என்றார் அமைச்சர்.

“சேவகர் இருக்கிறாரா?” என்றார்.

“இதோ இருக்கிறேன்!” என்றார் அவர்.

“தளபதி இருக்கிறாரா?” என்றார்.

“இருக்கிறேன்!” என்றார் தளபதி.

“அப்பாடா! அப்படியானால் நான் சுட்டது கரடியைத் தான்!” என்கிறார் ராஜா.

மனித உயிர் மீது மன்னனுக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கும் விதமான எந்தவொரு நடவடிக்கைக்கும் இடமளிக்கப் போவதில்லை

## ஜாதிக ஹெல உறுமய ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

இலங்கையின் இறைமைக்கு பங்கம் ஏற்படும் வகையிலும் பயங்கரவாதத்திற்கு துணை போகும் வகையிலும்அமெரிக்கதூதுவர் மெற்றாசில் வெளியிட்ட கருத்துக்கு கடும் எதிர்ப்புத்தெரிவிப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாக அமையாதென அமெரிக்கத் தூதுவர் றொபர்ன் பிளேக் வெளியிட்ட கருத்து இலங்கையின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடியது என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித்தேரர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத்தூதுவர் பதவியேற்ற நாள் முதல் இலங்கையின் உள் விவகாரங்களில் அதிகமாக தலையீடு செய்து வருவதாகவும் கட்சி விவகாரங்களில் கூட மூக்கை நுழைப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அமெரிக்காவின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற வகையில் இலங்கையில் அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவையில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் இடமளிக்கப் போவதில்லை என ஓமல்பே சோபித தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ)

# வரவு-செலவுத்திட்டத்தில் சகல ஊழியர்களின் சம்பளமும் 7ஆயிரத்து 500ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும்

## இன்று ஐ.தே.க சார் தொழிற்சங்கங்கள் போராட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தில் அனைத்து துறை சார்ந்த ஊழியர்களினதும் சம்பளம் ரூபா 7ஆயிரத்து500ஆல் அதிகரிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக மாலை 3.30 மணிக்கு ஐ.தே.கட்சி சார்ந்த தொழிற்சங்கங்கள் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளது.

யுத்தத்தை விற்பனை செய்து தொடர்ந்தும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் ஐ.தே. கட்சி எச்சரிக்கை விடுக்கின்றது.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே எதிர்க்கட்சியின் பிரதம கொறாடாவும் எம்.பியுமான ஜோசப் மைக்கல் பெரோரா இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது.

நாட்டில் இன்று நூற்றுக்குக்கு 51வீதம் மக்கள் ஒருவேளை உணவையே உட் கொள்கின்றனர். இதனால் எதிர்காலத்தில் போசாக்கு இல்லாத சமூகம் உருவாகும் ஆபத்து ஏற்பட் டுள்ளது.

நாளுக்கு நாள் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்து கொண்டே செல்கின்றன. உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் உயர்ந்த போது விலைகளை உயர்த்திய அரசாங்கம் இன்று உலகசந்தையில் விலை கணிசமான அளவு குறைந்த போதும் விலைகளைக் குறைக்கவில்லை

மக்களை பல்வேறு திசைகளில் அரசாங்கம் நெருக்கடியில் தள்ளி விட்டுள்ளது. ஆனால் அமைச்சர்களின் ஆடம்பர செலவுகள், ஆலோசகர்களின் ,அமைப்பளார்களின் பாதுகாப்பு செலவீனங்களுக்காக மக்கள் பணம் வீணாக செலவு செய்யப்படுகிறது.

எனவே எதிர்வரும் வரவு-செலவுத்திட்டதில் அரச துறை , தனியார் துறை மற்றும் பெருந் தோட்டத்துறை சார்ந்து அனைத்து ஊழியர்களினது சம்பளம் ரூபா 7 ஆயிரத்து 500 ஆல் அதிகரிக்கப்பட வேண்டும்.

இன்று அரசாங்கத்தை வலியுறுத்தி நடத்தப்படும் போராட்டத்தில் தேசிய ஊழியர்கள் சங்கம், அரச சேவைகள் தேசிய தொழிற் சங்க சம்மேளம் ,தேசிய கல்வித் துறைசார் தொழிற் சங்கங்கள் கலந்து கொள்கின்றன.

அத்தோடு போராட்டத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும் கலந்து கொள்ள வேண்டு மென்றும் ஜோசப் மைக்கல் பெரோரா எம்.பி தெரிவித்தார்.

**லால் பெரோரா- ஊடக செய லாளர் தேசிய ஊழியர்கள் சங்கம்.**

யுத்தத்தை விற்பனை செய்து மக்களை பட்டினிபோடுவதற்கு அரசாங்கத்திற்கு இடமளிக்க முடியாது. இன்று இடம் பெறுவது போராட்டத்தின்ஆரம்பமாகும்.

இதற் கு அரசாங்கம் செவி சாய்க்கா விட்டால் மக்களை வீதியில் இறக்குவோம்.

30ஆயிரம் கோடி ரூபாவை செலவழித்து மிஹின் எயார் நிறுவனத்தை ஆரம்பித்து மக்கள் பணத்தை வீணடித்த அரசாங்கத்தால் ஏன் உழைக்கும் வர்க்கத்தினருக்கு ரூபா 7ஆயிரத்து500 ரூபா சம்பள உயர்வை வழங்க முடியாது என்று லால் பெரோரா தெரிவித்துள்ளார். (ஓ)

## இராசி பலன்

*28.10.2008*
*(ஐப்பசி 12 ,செவ்வாய்க்கிழமை)*
*சித்திரை முன்னிரவு 7. 18மணிவரை*
*அமாவாசை பின்னிரவு 4.46மணிவரை*
*இராகுகாலம் 3.03- 4.33மணிவரை*
*சுபநேரம் 10.33-12.03 மணிவரை*
*அமாவாசை ,கேதார கௌரி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | செல்வாக்கு ,காரிய அனுகூலம்,குடும்ப மகிழ்ச்சி, அபூர்வ சந்திப்பு |
| இடபம் | சுவாரஸ்யம், முயற்சிகை கூடும், ஆரோக்கியம், போசன சுகம். |
| மிதுனம் | அஜீரண ரோகம், வேலைச் சுமை,முயற்சி தாமதம், தன விரயம். |
| கடகம் | உறவினர் சந்திப்பு,மனச் சஞ்சலம், ஆரோக்கியக் குறைவு, கல்வியில் ஆர்வம். |
| சிங்கம் | இனிய சம்பவம்,கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, போசன சுகம். |
| கன்னி | விவாதம்,கௌரவக்குறைவுதீடீர் நன்மை,பண விரயம். |
| துலாம் | கற்பனை மிகுதி , சயனசுகம், நண்பர்கள்சந்திப்பு, போசன நன்மை. |
| விருச்சிகம் | தந்தை வழிஉறவு, உணர்ச்சி வசப்படல்,உஷ்ண வியாதி, பிரயாணம். |
| தனுசு | செய் தொழில் நன்மை, கீர்த்தி, காரிய நன்மை, விருந்துபசாரம் |
| மகரம் | அதிகாரம்,தொழில் முன்னேற்றம், பெரியோர் உதவி, ஆரோக்கியம். |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, கட்டுப்பாடு,புதிய முயற்சி,ஆன்றோர் சந்திப்பு. |
| மீனம் | வாகனபயம்,எதிர்பாராத பிரச்சினை,காரிய தடங் கல், போசனசுகம். |

வளவன்

# எந்தவொரு அரசும் இந்தளவுக்கு கல்வித்துறையை சீரழிக்கவில்லை

## ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் கல்வித்துறையை இந்த அளவிற்கு சீரழிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டின் முழுக் கல்விக் கட்டமைப்பையும் இந்த அரசாங்கம் சீர்குலைந்துள்ளதாகஅவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தரம் ஒன்றிற்கான மாணவர் சேர்க்கை முதல் பல்கலைக்கழக கல்வி வரை ஓர் சிக்கல் நிறைந்த கட்டமைப்பு உருவாக் கப்பட் டுள்ளதாகஅவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் ரீதியான நியம னங்களின் காரணமாக முறை யான கல்விக் கொள்கை ஒன்றை முன்னெடுக்க முடியாத ஓர் துர்ப் பாக்கிய சூழ் நிலை ஏற்பட் டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையற்ற கல்விக் கொள்கைகளினால் எதிர் கால சமூகம் பெரும் சிக்கல்களை எதிர் நோக்க நேரிடும் என ரஞ்சித் மத் தும பண்டாரசுட்டிக் காட்டியுள்ளார். (ஓ)

### ஐ.தே.கவின் வருடாந்த மாநாடு

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான ரணில்விக்கிரமசிங்க தலைமையில் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை நடை பெறவுள்ளது. வருடாந்த மாநாட்டை இம்முறை தெஹிவளையில் நடத்துவதற்கு தீர்மானிக்கபட்டுள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

வருடாந்து மாநாட்டில் கட்சிக்கு உப தலைவர், பிரதித்தலைவர்கள் மீண்டும் நியமிக்கப்படவிருப்பதாகவும் ஐக்கிய தேசியக்கட்சி யின் யாப்பில் திருத்தங்களை ஏற்படுத்தி கட்சி மறு சீரமைக்கப்படும்.என்றும் தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் தலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் கட்சியை மறு சீரமைக்க வேண்டும் என்று செயற் குழு உறுப்பினர்கள் கோரியிருக்கின்ற நிலையிலேயே இந்த மாநாடு நடத்தப் படவிருக்கின்றது. (ஓ)

## ஆண்டு நிறைவு விழாவும் சிறப்புமலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் முதலாவது சாரணர் குழுவின் 92ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் அதிபர் சு.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ.வேதநாயகம், கௌரவ விருந்தினராக வடமாகாண சாரண ஆணையாளர் த.நா. போஜன், சிறப்பு விருந்தினராக யாழ்.சாரணர் மாவட்ட ஆணையாளர் க.செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-2)

## வீதியை செப்பனிட கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதியையும் இராச வீதியையும் இணைக்கும் கொட்டைக்காடு இந்து மயான வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

25-30 வருடங்களுக்கு மேலாக கல்லிட்டு தாரிடப்படாமல் காணப்படுகின்றது.

இவ் வீதியின் ஒரு பங்கு நல்லூர் பிரதேச சபையாலும் மற்றைய பங்கு வலி கிழக்கு பிரதேச சபையாலும் பராமரிக்கப்படுகின்றது. நல்லூர் பிரதேச சபை தனது பங்குக்குரிய வீதியை செப்பனிட்டுள்ள போதிலும் மறுபங்கு கற்கள், குன்று குழிகளாக காணப்படுகின்றது.

வீதியின் இருபக்கமும் விவசாய நிலங்கள் காணப்படுவதால் அதனூடாகச் செல்லும் வாகனங்கள் சேதத்திற்குள்ளாகின்றன. எனவே இவ் வீதியை செப்பனிட்டு உதவுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ-36)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 28

இப்பிரகடனத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் முழுமையாக எய்தப்படக்கூடிய சமூக சர்வதேசிய நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையவராவர்.

# நோயாளர்களுக்கான இலைக்கஞ்சி வழங்கும் திட்டம்

(பருத்தித்துறை)

மத்திய ஆயுள்வேத மருந்தகம், கரவெட்டியில் நோயாளர்களிற்கு இலவசமாக இலைக்கஞ்சி வழங்கும் திட்டமானது வைபவ ரீதியாக வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச ஆயுள்வேத வைத்திய அதிகாரியினால் (பொது சுகாதாரம்) இம் மாதம் 22ஆம் திகதி அன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில்,கரவெட்டி மத்திய ஆயுள் வேத மருந்தக பொறுப்பு வைத்திய அதிகாரி, ஊழியர்கள், நோயாளர்கள் கலந்துகொண்டு உதவிகளையும் வழங்கினர்.

இத்திட்டம் மாகாண சுதேச மருத்துவ பணிப்பாளரின் ஆலோசனைக்கமைவாக முன்னெடுக்கப்படுவதாகவும் பிரதி புதன்கிழமைகள் தோறும் முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நோயாளர்களிற்கு இலைக்கஞ்சி வழங்கப்படுமெனவும் இத்திட்டத்தின் கீழ் இரத்தசோகை, உறக்நோவு, உடற்தளர்ச்சி போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் மற்றும் குறைந்த போஷணை உடைய குழந்தைகள் பயனடைவார்கள் எனவும் மேலும் இத்தகைய பல திட்டங்கள் வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச மக்களின் சுகநலம் கருதி முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஆயுள்வேத வைத்திய அதிகாரி (பொதுசுகாதாரம்) டாக்டர் எஸ்.குமுதினி தெரிவித்தார். (ஓ)

# ஒசுசல விருது பெறும் யாழ்.ப.நோ.கூ.சங்க மருந்தகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மருந்தகம் அதிகமான அளவு மருந்துவகைகளை விற்பனை செய்த மருந்தகமாக தெரிவுசெய்யப்பட்டு "ஒசுசல" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மேற்படி மருந்தக கூட்டுத்தாபனத்தின் முகவரான யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சிறப்பு விருதும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஒசுசல மருந்துக் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்விலேயே கேடயமும் சான்றிதழும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் வழங்கப்பட்டன.

வருடாந்தம் அதிகமான அளவு மருந்து பொருட்களை விற்பனை செய்யும் மருந்தகங்களுக்கு ஒசுசல மருந்து கூட்டுத்தாபனம் விருது வழங்கி கௌரவிப்பது வழமை.

அந்தவகையில் இந்த வருடம் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

இது கூட்டுறவாளர்களுக்கு பெருமை தரும் விடயம் என யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார். (ஓ)

## விண்ணப்ப முடிவுத் திகதி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் 2009ஆம் ஆண்டிற்குரிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 3ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் க. கதிரமலை அறிவித்துள்ளார்.

இதற்கான இறுதித் திகதி இம் மாதம் 17ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## வேலணை பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்கு ரூபா 54 இலட்சம் ஒதுக்கீடு

வேலணை பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவென "கமநெகும" திட்டத்தின் கீழ் 54 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வேலணை ப.நோ.கூ.சங்கத்தின் அல்லைப்பிட்டிக்கான கிளை அமைத்தலுக்கு 12 இலட்சம் ரூபாவும் வேலணை வடக்கு நெசவு நிலைய வீதிக்கான மின்இணைப்பு விஸ்தரிப்புக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் வேலணை வைத்திய அதிகாரியின் விடுதிக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு 1 இலட்சத்து 20ஆயிரம் ரூபாவும் வேலணை துறையூர் மீனவ கூட்டுறவுச்சங்கத்துக்கு மின் இணைப்பு வழங்க 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள் கொள்வனவு மற்றும் விளையாட்டு மைதான புனரமைப்புக்கு 6 இலட்சம் ரூபாவும் செட்டிபுலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு மின்இணைப்பு வழங்க 1 இலட்சத்து 20ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் வேலணை தென்கிழக்கு நேதாஜி சபைக்கு நிலையப் பொதுக்கிணறு அமைப்புக்கு 1 இலட்சத்து 80ஆயிரம் ரூபாவும் வேலணைதெற்கு நெசவு நிலையத்துக்கு தளபாட உபகரணங்கள் கொள்வனவுக்கு 6 இலட்சம் ரூபாவும் புங்குடுதீவு மகாவித்தியாலய களஞ்சிய அறை அமைப்புக்கு 6 இலட் சம்ரூபாவும் புங்குடுதீவு ப.நோ.கூ.சங்க கட்டடத் திருத்த வேலைகளுக்கு 9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் புங்குடுதீவு மத்தி மேற்கு சனசமூக கல்வி நிலைய அபிவிருத்திக்கு 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் நயினாதீவு பொதுக் கிணறுகள் புனரமைப் புக்கு 60 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஓ)

# வலிகாமம் கல்விவலய விசேட கல்வி அலகின் 'உட்படுத்தல் ஆண்டு-2009'

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகு 2009 ஆம் ஆண்டை உட்படுத்தல் ஆண்டாக பிரகடனப்படுத்தி செயற்படத் தொடங்கியுள்ளது.

அதனடிப்படையில் உடல், உள, சமூக பாதிப்புக்குள்ளான பிள்ளைகளை சாதாரண பாடசலைகளில் இணைத்து கற்றல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முன் வந்துள்ளது.

எனவே அதற்கான விண்ணப்பங்களை புதன்,வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3மணிவரை வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகில் பெற்று நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் நி.முருகானந்தன் கேட்டுக்கொள்கின்றார்.

உட்படுத்தல் ஆண்டை முன்னிட்டு பாதிப்புக்குள்ளான பிள்ளைகளின் வெளிப்பாடாக அமையும் பாடல்

**எங்களை உங்களில் ஒருவராக்கிடுவீர்....**

**பல்லவி**

*எங்களை உங்களில் ஒருவராக்கிடுவீர்*
*எம்மவர் உணர்வுகளை புரிந்துகொண்டிடுவீர்*

**அனுபல்லவி**

*மானிலத்தில் நாங்கள் மானிடராய் வாழ*
*மதிப்பளித்து எம்மை நல்வழிப்படுத்துவீர்*

**சரணம்**

*பார்க்கவும் முடியவில்லை கேட்கவும் இயலவில்லை*
*பேசவோ வகையுமில்லை, வாழவோ வழியுமில்லை*

*எம்குறை மறைத்தெம்மை உங்களோடணைத்தெம்மை*
*என்றுமே வாழ வழிசமைத்திடுவீர்*

*அறிவு,திறன், மனப்பாங்கு அனைத்தையும் அளித்தெம்மை*
*அன்புடன்,ஆதரவு அனைத்தையும்தந்தெம்மை*
*சிந்தனை ஆற்றலை துண்டிய வளர்த்தெம்மை*
*சிறப்புடன் வாழ சீர்தூக்கி நின்றிடுவீர்.* (ஓ)




# கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போ எயார் மற்றும் சண்முகம் சைவ உணவகம் ஆகியவற்றின் ஆதரவுடனும் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப் பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் யாழ்.மத்திய கல்லூரிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியல் யாழ்.மத்திய கல்லூரியும், சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்.இந்துக் கல்லூ ரிக்குமிடையிலான போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரியும், உடுவில் பெண்கள் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் உடுவில் பெண்கள் கல்லூரியும்,

யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் யாழ.மத்திய கல்லூரியும், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கும் உடுவில் பெண்கள் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் உடுவில் பெண்கள் கல்லூரியும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றிபெற்றுள்ளன.

இச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். மத்திய கல்லூரியும் சென்பற்றிக்ஸ் கல்லூரியும் 1ஆவது அரையிறுதிப் போட்டிக்காக மோதவுள்ளன.

நாளை வேம்படிப் பெண்கள் உயர்தரப் பாடசாலையும் திருக்குடும்ப கன்னியர் மடமும் மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியும், கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியும் மோதவுள்ளன.

30 ஆம் திகதி இரண்டாவது அரையிறுதிப் போட்டியும், 31 ஆம் திகதி அல்லது முதலாம் திகதி காலை மூன்றாம் இடத்துக்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

நவம்பர் முதலாம் திகதி சனி மாலை 2 மணி முதல் 6மணிவரை இறுதி ஆட்டங்கள் இடம்பெறும். (ஓ-6)




வட்டு இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திருமதி ஜெ.அருள்மயம் கல்லூரிக் கொடி ஏற்றுவதையும், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், திருமதி கணேஷ், கல்லூரி அதிபர் கலாநிதி மா.வேதநாதன், துரை எங்கரசு ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 137



## டொனமூர் யாப்புத் திருத்தம்

1.சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற தெரியப்பட்ட அங்கத்தவர்கள் மேலதிகமாயிருத்தல்வேண்டும்.

2.இலங்கைக்கு தாளரர்ளமான அளவில் -பரந்த அடிப்படையில் வாக்குரிமை வழங்கப்படல் வேண்டும்.

3. தெரியப்பட்ட அங்கத்தவருள் ஒருவர் வாசகர் எனப்படும் சபாநாயகராகத் தெரியப்பட்டுச் சபைக் கூட்டங்களுக்குத்தலைமை தாங்குதல்வேண்டும்.ஆள்பதி இதுகாறும் அண்மைக்காலத்தில் 1924 முதல் பெயரளவில் தலைவராயிருந்த முறை தானும் இருத்தலாகாது.

சட்ட நிறைவேவற்று சபையினர் சட்ட சபைக்குப் பொறுப்பாளராயிருத்தலோடு, அச் சபையின் அங்கத்தவருள் அரைப் பங்குக்கு அதிகமானோர் சட்டசபை அங்கத்தவராயே (தெரியப்பட்ட உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராய்) இருத்தல் வேண்டும்.

5. சட்டநிறைவேற்று சபை அங்கத்தவர் மந்திரிப் பொறுப்புள்ளவராய் இருத்தல் வேண்டும்.

6.ஆள்பதி சனநாயக பாராளுமன்ற அரசயாப்பு,சம்பிரதாயங்கள் ஆகியவற்றை நன்கறிந்த அறிவாளியாக இருத்தல்வேண்டும்.

7. கடைசியாக நிலவிய சட்டசபையிலிருந்த வகுப்புவாதப் பிரதிநிதித்துவமுறை நீக்கப்படல் வேண்டும்.

8.பொறுப்பில்லாமல் பெரும்பான்மையினராயிருந்த தெரியப்பட்ட உத்தியோகப் பற்றற் பிரதிநிதிகள் நிலையும், சிறுபான்மையினராயினும் பொறுப்புடனிருந்த உத்தியோகத்தர் நிலையும் முரண்படக் கூடியதாயிருந்த நிலமாற வேண்டும்.

சேர்.இராமநாதன் புரிபூரண சுயராச்சியம் வேண்டும் என்னும் கருத்துள்ளவராயும், வைத்திலிங்கம் துரைச்சுவாமி டொமினியன் தகுதி எனப்படும் ஆணிலப் பதம் வேண்டும் என்னும் கருத்துள்ளவராயும் இருந்தனர். சிங்களப் பெரியார்களைப்

### மீள் பார்வை

பொறுத்தமட்டில் அவர்கள் பூரண சுதந்திரத்தையோ, ஆணிலப் பதத் தகுதியையோ அவாவவில்லை. அவர்கள் கேட்டதும் விரும்பியதும் ஆள்புல அமைப்பில் தொகுதிவாரியாகத் தெரியப்பட்ட அங்கத்தவர் பெரும்பான்மையினராக அமரும் சட்டசபையேயாகும். அத்தோடு,மந்திரிசபை எனப் பின்னர் கருவாகும் தன்மையின் சில பொறுப்பும், சிறு பான்மையினரைத் திருப்திப் படுத்த ஒரு சிறிதளவு வகுப்புவாதப் பிரதிநிதித்துவமேயாம்.

அவர்கள் சர்வசனவாக்குரிமை கேட்கவில்லை. அவர்களுடைய நோக்கம் சட்ட நிறைவேற்று சபையில் மந்திரப் பொறுப்பைப் படிப்படியாக ஏற்று ஆட்சியை இலங்கையர் மயமாக்குவதேயாம்.

எல்லோரும் நாட்டபிமானத்தால் தங்கள் தாய்த் திருநாடு நன்றாக இருத்தல் வேண்டும் என்பதற்காகவே அயராதுழைத்தார்கள்.

அவர்கள் கருதிய வழிவகைகள் வெவ்வேறாக இருந்தபோதிலும் அவர்கள் எல்லோருடைய நோக்கமும் ஒன்றாகவே இருந்தது.அது அந்நியர் பிடியிலிருந்து இலங்கையர் விடுதலைப் பெறுதல் என்பதேயாம்.

டிவன்சயர் - மனிங் திருத்தத்தை 1925-1927 வரை ஆட்சி செய்த ஆள்பதி கிளிபோட் விரும்பவில்லை. அவர் முன்னர் இலங்கையில் பிரதம காரியதரிசியாயும் இருந்து நல்ல அனுபவம் பெற்றவர். அவர் அந்த அமைப்பில் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த இயலாதென்றும் குடியேற்ற மந்திரியாருக்கு எழுதியும் உள்ளார்.

தம்மை வேறெங்காவது மாற்றிவிட்டால் நல்லது என்றும் விண்ணப்பித்தார். எனவே குடியேற்ற மந்திரியார் ஆள்பதியை மலாயாவுக்கு மாற்றிவிட்டார். ஆள்பதி கிளிபோட் மலாயாவுக்கு போகுமுன், டிவன்சயர் – மனிங் அமைப்பை அடியோடு மாற்றியமைக்குமுகமாககக் குடியேற்ற மந்திரியாருக்கு ஒரு தகவுரை எழுதியதோடு அத்தகைய மாற்றத்தின்போது இலங்கைக்கு ஓர் அரசியல் விசாரணைச் சபையை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் எழுதினார்.

கிளிபோட்டுக்குப் பின்வந்த ஆள்பதி சேர்.ஹேபேட் ஸ்ரான்லி டிவன்சயர்- மனிங் திருத்தத்தைக் கொண்டு நடத்தலாம் என முயன்றபோதிலும் குடியேற்ற மந்திரியார் அமெரி, கிளிபோட்டின் ஆலோசனையின் வண்ணம் இலங்கைக்கு அரசியல் விசாரணைச் சபையொன்றை அனுப்பத் தீர்மானித்தார்.

விசாரணைக் குழுவினர் 6 .8.1927 இல் நியமிக்கப்பட்டார்கள்,அதன் தலைவராயமர்ந்த *டொனமூர்வேள்* பிரித்தானிய பாராளுமன்றத்துப் பிரபுக்கள் சபையின் காரிய நிர்வாகசபைகளின் தலைவராயிருந்து அனுபவம் பெற்ற பெரியார், அன்றி அவர் யுத்த அலுவல் மந்திரியாராயும் கடமையாற்றியனுபவம் பெற்றவர். சேர். மத்தியூநாதன் என்பார். குடியேற்ற நாடுகளின் பரிபாலனத்தில் நேரனுபவம் பெற்றவர். அவர் ஹொங்கொங் முதலிய இடங்களில் ஆள்பதியாய் இருந்தவர். சேர் யெவ்ரி பட்லர் என்பார் பாராளுமன்றப் பிரதிநிதியாயிருந்தமையோடு கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் பேராசிரியாயுமிருந்தவர்.

**க.சி.குலரத்தினம்**

அவருக்குச் சர்வதேச சங்கத்தின் அமைப்பும் அதன் நடைமுறையும் நன்கு தெரிந்த அலுவல்களாயிருந்தன. கலாநிதி சேர். டிரமன்சீல் அவர்கள் மாநகரசபையிலும் பாராளுமன்றத்திலும் பிரதிநிதியாயிருந்தமையோடு தொழிற் கட்சியில் பெரும் பதவியிலும் இருந்த நல்ல நோக்கமுள்ளவாவர். (தொடரும்)






எவர்சைன் கல்வி நிறுவனத்தின் முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டு விழா அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு விருந்தினர்கள் மேலைத்தேய வாத்தியங்கள் சகிதம் அழைத்துவரப்படுவதையும், வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# தெற்காசியாவில் வறுமைக் குறைப்பும் பொருளாதார வளர்ச்சியும் 12

◆ *சமமின்மையை குறைத்தல்*

அனைத்து மட்டத்திலும் சமமற்ற வளமும் வருமானப் பகிர்வு நீக்கப்படுதல்



வேண்டும். நேபாளத்தில் சமூக மற்றும் பால் நிலை வேறுபாடுகளுக்கேற்ப பக்கச் சார்பாக வருமாணம் பகிரப் படுகிறது. இதுவே பொதுவாக சார்க் நாடுகள் அனைத்திலும் இயல்பாகவுள்ளது. பாகிஸ்தான் அரசாங்கங்களின் நோக்கானது வளர்ச்சி தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ள போதும் அதன் மாகாணங்களுக்கிடையிலான பின்தங்கிய பிரதேசங்களில் விவசாய உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் கொழும்பு உள்ளடங்கலான மேல் மாகாணத்திற்கு வெளியிலான மாகாணங்களினதும் வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றல் உணரப்படவேண்டியுள்ளமை மிகவும் அவசியமான விடயமாகும்.

அபிவிருத்தியின் மூலம் கிராம நகர விருத்தியின் சமத்துவமின்மை நீக்கப்பட வேண்டும்.

தொலைத்தொடர்பு சேவைகளை கிராமத்தில் விருத்தி செய்த பங்களாதேஷின் அனுபவம் பிராந்திய நாடுகளால் பின்பற்றப் படுவது பயனுள்ளதாகும். கிராமிய தொலைத் தொடர்புக்கான ஒரு புதிய மாதிரியை பங்களாதேஷின் கிராமின் ஃபோன் (Grameen Phone) எனும் கம்பனி கிராமீன் வங்கியியுடன் (Grameen Bank) இணைந்து செயற்படுத்துகின்றது. அவ்வாறே பூட்டான் UNDP இன் உதவியுடன் தோட்டச் செய்கையை விருத்தி செய்து கிராமிய மேம்பாட்டை சாத்தியமாக்குகின்றது.

மேலும் நேபாளத்தில் கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (Village Development Programme-VDP) அடிமட்ட மக்களின் வறுமையை தணிக்கும் நோக்கிலான நிறுவனக் கட்டமைப்பை கட்டியெழுப்புவதில் வெற்றிகண்டுள்ளது.இவ்வாறான திட்டங்கள் சார்க் நாடுகள் அனைத்திலும் முன்னெடுக்கப்படவேண்டும்.

மருத்துவம், சுகாதாரம், கல்வி மற்றம் குடிநீர் போன்ற பொதுச் சேவைகளின் அதிகரித்த வழங்கலானது -நிரம்பலானது ; பொருளாதார வளர்ச்சி மீதான தனிப்பட்ட மற்றும் பிராந்திய சமத்துவமின்மையின் விளைவுகளை சீரமைக்க உதவுவதுடன் பொருளாதார வளர்ச்சியின் நிலைபேண் தன்மைக்கும் பங்களிப்பு செய்வதாக அமையும்.

மேலும் இப்பிராந்திய நாடுகள் அனைத்திலும் மேற்கொள்ளப்படும் செலவுத் தாக்கமுடைய பொதுச் சேவை வழங்கல்களுக்கு (Cost effective public service delivery) முன்னுரிமை அளிக்கின்ற வரவு செலவுத் திட்ட சீராக்கங்கள் (Budget reform) பிராந்தியமெங்குமே இடம்பெற்று வருகின்ற போதும் அது பூர்த்தியாக்கப்படுதல் அவசியமாகவுள்ளது.

◆ *வளப்பகிர்வில் நாடுகளுக்கிடையில் ஒன்றிணைந்த செயற்பாடு*

தெற்காசிய உலகில் மிகக் குறைந்தளவில் ஒருங்கிணைக்கப்பட்ட பிராந்தியமாக இருக்கிறது. இத்தகைய குறைந்தளவில் ஆரம்பித்து உயர்ந்த ஒருங்கிணைவை அடைதல்மூலம் பல்வேறு பரிமாணங்களில் எண்ணற்ற நன்மைகளை உருவாக்க முடியும்.

சார்க் நாடுகளுக்கிடையிலான மரபு ரீதியான வர்த்தகம் மற்றும் முதலீட்டு பாய்ச்சல்கள், மக்களின் எல்லை கடந்த சுதந்திரமான அசைவு மற்றும் அரசியல் ரீதியான இராஜதந்திர உறவுகள் போன்ற அனைத்தையும் சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட எல்லைத் தகராறுகள்/ முரண்பாடுகள் சிதைத்துவிட்டன.

இந்தியாவும் பாகிஸ்தானும் மிகவும் முதன்மையான சமூக அபிவிருத்தியில் பாதிப்பேற்படும் வகையில் பாரியளவிலான இராணுவச் செலவீனங்களுக்கு உள்ளாகின்றன அல்லது யுத்தத்தில் தீவிர முனைப்பினைக் காட்டுகின்றன.

அவ்வாறே அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு வெளிநாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலையிலுள்ள இலங்கையும் உள்நாட்டு போரில் அதீத அக்கறை செலுத்துகின்றது. இவ்வாறான நிலைப்பாடு உள்ளவரை சார்க் ஒரு ஒருங்கிணைந்த செயற்பாட்டில் சாத்தியமற்ற தோல்வி கண்ட அமைப்பாகவே இருக்கும். சமூக முதலீடுகள் (Social investment) பாதுகாக்கப்பட்டு பிராந்தியத்திற்கு உள்ளான வர்த்தகம் (Intra -Regional trade), முதலீடு மற்றும் மக்களின் சுந்திரமான அசைவு என்பன ஏனைய பிராந்தியங்களில் உள்ள அளவுக்கு மீள நிலைநிறுத்தப்பட வேண்டும்.

**விமலேந்திரன் பாரதிதாஸ்**
உதவி விரிவுரையாளர்
பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

இவ்வகை யில்முரண்பாடுகளை முகாமை செய்தல்/ கையாளுதல் என்பது அவசியமானது. (தொடரும்)

# முதுகில் ஏற்படும் கூனல்



பொதுவாக முதுகெலும்பு நேராகப் பார்க்கும்போது நேர் கோடாகவும், பக்கவாட்டில் பார்க்கும் போது சற்றே வளைந்தும் காட்சியளிக்கும். இதுவே நம் உடல் தோற்றத்தினை வனப்பாகக் காட்ட முக்கியமான காரணமாக விளங்குகிறது.

தோற்றத்தை அளிப்பதோடு மட்டுமல்லாமல் நம் வாழ்க்கைக்குத் தேவையான செயல்கள் அனைத்தையும் செய்ய மூல காரணமாகிறது. இந்த முதுகெலும்பின் வளர்ச்சியில் கோளாறு ஏற்பட்டால் கைபோஸிஸ் (kyphosis) என்ற நோயும் ஸ்கோலி யோஸிஸ் (Scoliosis) என்ற நோயும் ஏற்படலாம்.

## நவீன சத்திர சிகிச்சை நல்ல பலனைத் தரும்

ஸ்கோலியயோஸிஸ் நோயை விட கைபோஸிஸ் நோயே பரவலாகக் காணப்படுகிறது. கைபோஸிஸ் நோய் ஏற்பட்டோருக்கு முதுகில் கூனல் ஏற்படும். இந்த நோய் ஏற்பட மிக முக்கியமான காரணம் சிறு வயதில் முதுகெலும்பில் ஏற்படக்கூடிய "ரிபி" என்னும் காசநோய், நோய் ஏற்படும் போது முதுகெலும்பில் உள்ள எலும்புகளை பாதித்து விடும். இதனால் முதுகெலும்பின் பலம் குறைந்து வளையத் தொடங்கும்.

சீராக உள்ள எலும்புகள் ஒன்றோடொன்று சேர்ந்து விட முயலும் போது நடுவில் பழுத டைந்த எலும்பு பின்தள்ளப்படும் போது முதுகு கூனாகிவிடும்.

வருத்தம் தரும் விஷயம் என்னவென்றால் சிறு வயதில் முதுகெலும்பில் ஏற்படும் காசநோய் குணப்படுத்தப்பட்டு விட்டாலும், பல வருடங்களுக்குப் பின் பருவ வயதில் தான் வளர்ச்சி பாதிக்கப்பட்டு கூன் ஏற்படத் தொடங்கும். முதுகெலும்பு வளரும் பருவம் குழந்தைகளின் எட்டு முதல் பதின்மூன்று வயது வரையில்தான்.

மூன்று நான்கு வயதில் காசநோய் ஏற்பட்டிருந்தாலும், முதுகு கூனாகத் தொடங்குவது பருவ வயதில்தான். சிறுவயதில் காசநோய் ஏற்படும்போது ஒரு வருட காலம் மருந்து அளிப்பார்கள். அதன்பின் நோய் குணமடைந்து விடுவதால் அதைப் பற்றி மறந்து விடுவார்கள்.

பருவ வயது வரும் போது முதுகில் பத்து முதல் இதுபது டிகிரி அளவு முதுகு கூனத் தொடங்கி, மூன்று , நான்கு வருடங்களில் அறுபது முதல் எழுபது டிகிரி வந்துவிடும். அதனால் சிறுவயதில் முதுகெலும்பில் காசநோய் ஏற்பட்டால் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

அப்படியானால் சிறு வயதில் முதுகெலும்பில் காசநோய் ஏற்பட்டால் பிற்காலத்தில் கூனல் முதுகுடன் தான் வாழ வேண்டுமா? இல்லை! மருத்துவ உலகம் முன்னேறியுள்ளதால் இந்த நிலைக்கு இரு வகைத் தீர்வுகள் உள்ளன.

சிறுவயதில் முதுகெலும்பில் காசநோய் ஏற்பட்டாலும் எலும்புகள் எதுவும் பாதிக்கப் படாதவர்களைத் தொடர்ந்து கண்காணித்து,

# குணமடையும் சாத்தியம்



தேவைப்பட்டால் மருந்து, ப்ளாஸ்டர் சிகிச்சை செய்து குணப்படுத்தலாம். இது ஒரு வகை தீர்வு.

மற்றொரு வகையில் காசநோய் எலும்புகளைப் பாதித்திருந்தால் அவர்களின் முதுகெலும்பில் அறுவைச் சிகிச்சை செய்து பாதிக்கப்பட்ட உருமாறிய எலும்பு நீக்கப்பட்டு அந்த இடத்தில் நோயாளியின் எலும்பினை உடலின் மற்ற பகுதியிலிருந்து எடுத்துப்

## சிறு வயதில் ஏற்படும் காசநோயே இதற்கு மூலகாரணம்

பொருத்தி, உறுதியாக வைக்க டைட்டானியம் தகடுகள், ஸ்க்ரூக்கள் கொண்டு சீர் செய்யலாம். இந்தச் சிகிச்சை செய்வதன் மூலம் கூனல் விழுந்த முதுகை நிமிரச் செய்யலாம்.

***இந்த அறுவைச் சிகிச்சை யாருக்குத் தேவை?***

காசநோயினால் முதுகெலும்பு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அறுவைச் சிகிச்சை தேவையில்லை. அதேசமயம் செய்யவேண்டிய அவசியமுள்ளவர்களுக்குச் செய்யாவிட்டால் கூன் ஏற்படும்.

***இதனை எப்படிக் கண்டறிவது?***

இந்தக் கேள்வியை மையமாகக் கொண்டு தமிழ் நாடு மருத்துவ பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்து ஒரு திட்டத்தினை தீர்வாகக் கண்டு பிடித்துள்ளனர்.

இதில் முறையாகச் செய்யப்படும் பரிசோதனைகளும், வருடா வருடம் குழந்தைகளின் வளர்ச்சியை அளந்து கண்காணிப்பதன் மூலமாகவும் அவசியமானவர்களுக்கு மட்டுமே அறுவைச் சிசிச்சை செய்யவேண்டிய நிலையைக் கண்டுபிடிக்க முடிகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக தேவையில்லர்த போது அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளாமல் அறுபத்தி ஐந்து சதவீத குழந்தைகளைக் காப்பாற்ற முடிந்துள்ளது.

***அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளா விட்டால் என்ன ஆகும்?***

கைபோஸிஸ் நோயினால் ஏற்படும் கூனல் முதுகு உடல் அழகை மட்டும் பாதிப்பதில்லை. மூச்சு விடுவதற்கும் நடப்பதற்கும் சிரமம் ஏற்படும். ஸ்பைனல் கார்ட் நொருங்கிப் போய்விட்டால் உடல் பாரிச வாயுவினால் பாதிக்கப்படும். சிறுநீர் கழிப்பதும், மலம் கழிப்பதும் கட்டுப்பாட்டில் இருக்காது.

ஏழு வயதுப் பெண் ஒருவர் கூன் முதுகிற்கான சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு ஒன்றரை வயதாக இருந்தபோது அவர் தாயார் காசநோயால் இறந்துபோய்விட்டார்.

ஒரு வருடத்திற்குப் பின் அவளின் முதுகுத் தண்டில் காசநோய் ஏற்பட்டு மெதுவாக பாரிசவாயு ஏற்படத் தொடங்கியது. மருந்தும், ப்ளாஸ்டர் சிகிச்சையும் அளித்ததில் எழுந்து நடக்கத் தொடங்கினாள். ஆனால் சற்றுத் தூரம் நடந்தாலும் மூச்சு வாங்கத் தொடங்கியது.

அவளுடைய தந்தை அன்றாடம் கூலி வாங்கும் ஒரு தொழிலாளியாக இருந்ததால் அறுவைச் சிகிச்சை செய்ய வசதியில்லை.

அதனால் இலவசமாக அவளுக்கு அறுவைச் சிகிச்சை செய்தனர். அதன் பின்னர் அவள் இதயக் கோளாறு, மூச்சுக் கோளாறு, பாரிசவாயு ஆகியவற்றின் தொல்லையின்றி வாழ்கிறாள். கூனலாக இருந்த முதுகு நிமிர்ந்துவிட்டது. பெண் குழந்தைகளையாவது திருமணம் ஆகவேண்டும் என்று சிகிச்சை பெற அழைத்து வருகின்றனர்.

ஆண் குழந்தைகளை அறவே விட்டு விடுகின்றனர். இதற்கு அறியாமையும், அறுவைச் சிகிச்சையைப் பற்றிய பயமுமே காரணம்.

"முதுகெலும்பில் அறுவைச் சிகிச்சையா? உயிருக்கே ஆபத்து. சிறிய தவறு நிகழ்ந்தால் கூட பாரிசவாயு ஏற்பட்டுவிடும்" என்று பயமுறுத்துவதால் சிகிச்சைக்கு அழைத்து வரவே பயப்படுகின்றனர் பெற்றோர்கள்.

ஆனால் காலம் தாழ்த்தி வந்தால் சிகிச்சை செய்தும் ஓரளவிற்குத்தான் கூனலை நிமிர்த்த முடியும்.

நூறு டிகிரி அளவிற்கு முதுகெலும்பு வளைந்து விட்டால் நுரையீரல் பாதிக்கப்பட்டு மூச்சுவிடுவதே மிகச் சிரமமாகி விடும்.

**முதுகுத்தண்டில் ஏற்படும் ட்யூமர் என்ற கட்டிகள்**

இருபத்திமூன்று வயது இளைஞர் ஒருவர் இரண்டு வருடங்களாக கீழ் முதுகில் வலியினால் அவதிப்பட்டு வந்தார்.

பரிசோதனை செய்ததில் முதுகுத் தண்டில் "ஹீமாங்கியோமா" என்ற கட்டி இரத்தக் குழாயில் இருப்பது தெரிந்தது. இத்தகைய நிலையில் முன்பெல்லாம் அறுவைச் சிகிச்சை செய்து மொத்த கட்டியையும் நீக்குவார்கள்.

இதனால் முதுகெலும்பில் ஆறு முதல் ஏழு சென்ரிமீற்றர் அளவு ஓட்டை ஏற்படும். அதனை உடலின் பிற பகுதியில் உள்ள எலும்புகளைக் கொண்டு நிரப்பி சீர்செய்வார்கள்.

இதில் பலமுறை தோல்வி ஏற்படும். சீர் செய்தாலும் படுக்கையிலேயே பல மாதங்கள் இருக்க நேரிடும்.

எனவே அவருக்கு நவீன முறை மருத்துவ உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டது. கட்டி நீக்கப்பட்டு டைட்டானியம் தகடுகளால் ஆன கூண்டு போன்ற அமைப்பை ஓட்டையில் பொருத்தி பிற இடங்களில் இருந்து எலும்புகள் சவ்வுப் பகுதிகள் இட்டு நிரப்பி அதை தாங்க டைட்டானியம் ப்ளேட்டுகள், ஸ்க்ரூக்கள் பொருத்தப்பட்டன. ஒரே வாரத்தில் நடக்கவைக்கப்பட்டார்.




# தொந்தி குறைய கைகொடுக்கிறது மூச்சுப் பயிற்சி ...

மூச்சுப் பயிற்சி-மனிதனுக்கு முழு ஆரோக்கியத்தைத் தரும் எளிய செலவில்லா பயிற்சிகளில் முக்கியமானவைகளில் மூச்சுப் பயிற்சியும் ஒன்று. தினமும் வீட்டில் இருந்தபடியே எளிமையாக செய்யலாம்.

இப்போதெல்லாம் குறைந்தபட்சம் 2 ஆயிரம் ரூபாய் செலவழித்தால் தான் எதையும் தெரிந்துகொண்டதுபோல நினைப்பது பேஷனாகிவிட்டது. அதனால்தான் மூக்கு வழியாக மூச்சைஇழுத்து விடுவதைக் கூட வியாபாரமாக்கி விட்டனர் பலரும். காலம் காலமாக இதை பிராணாயாமம் என்று சொல்லிக் கொண்டிருந்தபோது, அதை நாம் ஒதுக்கி விட்டோம். ஆனால் அதையே இப்போது பல பெயர்களில் அதுவும் மேற்கத்திய பாணியில் பாஷைகளில் விளம்பரம் செய்வதால் அது தான் பலரையும் ஈர்க்கிறது. எப்படியோ மூச்சுப் பயிற்சி என்ற அரிய, பாரம்பரிய உடல் மற்றும் மூளையை சுறு சுறுப்பாக்கும் பயிற்சி இன்று பிரபல்யமாகி விட்டது.

மூச்சுப் பயிற்சி என்பது முறைப்படி மூக்கை பிடித்து தளர்த்தியபடி மூச்சை இழுப்பதும், வெளியேற்றுவதும் தான். அடிப்படை இதுதானே ஒழிய, பலரும் பல வகையில் பெயர்களையும் முறைகளையும் மாற்றிப் பயிற்சி தருகின்றனர்.

பல ஆண்டாக, பாரம்பரியமாக "பிரணாயாமம்" என்று சமஸ்கிருதத்தில் சொல்லப்பட்டு வருகிறது. பூணூல் போட்டுள்ள பிராமணர்கள் தினமும் சந்தியாவந்தனம் செய்யும் போது, பிரணாயாமம் செய்வது வழக்கம்.

இதனை இது மூச்சுப் பயிற்சி என்றும், வடக்கே பல பெயர்களிலும் சொல்கின்றனர். கபால் பாத்தி, பாஸ்த்ரிகா என்று சில பெயர்களில் பயிற்சி தரப்படுகிறது. எல்லாமே அடிப்படையில் பிராணாயாமம் தான்.

பணம் இல்லாமல் இந்தக் காலத்தில் எதுவும் கற்கவோ, பயிற்சி பெறவோ முடியாது தான். ஆனாலும், குறைந்தபட்ச கட்டணம் வசூலித்தால், பலரும் பயன் அடைவர். சீனா பல்பு வாங்குவதில் பலரும் ஆர்வம் கொண்டிருப்பது போல எதிர்காலத்தில் சீனா ஒரு புதுப் பெயர் மூச்சுப் பயிற்சியை குறைந்த கட்டணத்தில் சொல்லித் தந்தாலும் ஆச்சரியம் இல்லை. மூச்சுப் பயிற்சியை மட்டுமன்றி தியானம், யோகா போன்றவற்றை, பள்ளி பாடத்தில் ஒரு வகுப்பாகக் குறைந்தபட்சம் ஆறாவது வகுப்பில் இருந்து வைத்தால், எல்லாருக்கும் எதிர்காலத்தில் குறைவில்லாத ஆரோக்கியம் கிடைக்குமே.

நுரையீரலுக்கு ஒக்சிஜன்: மூளைக்கு தூய்மை மூச்சுப் பயிற்சியால் ,மிக முக்கியமான இரு உறுப்புக்கள், முழு ஆரோக்கியதுடன் காணப்படும். அடுத்து, மூளைக்கு தூய்மையும், சுறுசுறுப்பும் கிடைக்கிறது.

தொந்தி உள்ளவர்களுக்கு தொந்தி கரைய சில பயிற்சிகள் உண்டு. அதில் மூச்சுப் பயிற்சியும் ஒன்று அடிவயிற்றுக் கொழுப்புத் தான்



பலருக்கும் இளைய வயதிலேயே தொந்தியைத் தருகிறது. அதை மூச்சுப் பயிற்சி போக்கும். நம் உடல் எல்லா வகையிலும், எதிர்ப்புச் சக்தியைப்பெற்று, இரசாயன இயக்கங்கள் சீராக இருக்கவேண்டும். அப்படி இருக்க மூச்சுப் பயிற்சி உதவுகிறது. சோர்வு நீங்கி நம் உந்துசக்தியை அதிகரிக்கும்.

**எப்படி செய்யவேண்டும்?**

தரையில், காலை மடக்கி சம்மணமிட்டு உட்காரவேண்டும். தலை, கழுத்து, முதுகெலும்பு ஆகியவை ஒரே நேராக இருக்கும் வகையில் நிமிர்ந்து உட்காரவேண்டும். உடலை ரிலாக்ஸாக வைத்துக்கொள்ள வேண்டும். தசைகளையோ, கை கால்களையோ இறுக்கமாக வைத்துக்கொள்ளக் கூடாது.

◆மூக்கு வழியாக மூச்சை இழுக்க வேண்டும். நீங்கள் இழுக்கும் மூச்சு மூலம், உதர விதானம் (மார்பு, வயிறு இடையே உள்ள முக்கிய தசைநார்கள்) அடிவயிற்றுத் தசைகள் எல்லாம் விரிவடையவேண்டும்.

◆மூச்சு இழுக்கும்போது இந்த இரு பகுதிகளில் தசைகள் விரிவடைகின்றன அல்லவா? ஓரிரு வினாடிகள் முடிந்தவரை நிறுத்தி வைக்கவும்.

◆அப்புறம், உள்ளிழுத்த மூச்சை வெளி விட வேண்டும். அப்போது உதரவிதானமும் அடிவயிறும் சுருங்கவேண்டும்.

◆இப்படி தொடர்ந்து 25,30 தடவைகள் செய்யவும் இது ஒரு சுற்று.

◆இவ்வாறு மூன்று சுற்று செய்ய வேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கும் சில நிமிடங்கள் இடைவெளிவிடலாம்.

முதலில் எதையும் நாமே செய்யக் கூடாது. இப்போதே சிலர், பாதி டாக்டராகி அவர்களே பிரிஸ்கிரைப் பண்ணிக்கொண்டு தானும் கண்ட கண்ட மாத்திரைகளை சாப்பிடுகின்றனர். அடுத்தவர்களையும் தவறான வழியில் இட்டுச் செல்கின்றனர்.

அப்படியே, மூச்சுப் பயிற்சியையும் சிலர் செய்கின்றனர். ஆரம்பப் பயிற்சி பெற்றுக் கொண்டு அப்புறம் தானே செய்யலாம். சில கோளாறு உள்ளவர்கள் கண்டிப்பாக மூச்சுப் பயிற்சி செய்யக்கூடாது. அதுவும் பலருக்கு தெரியாது. ஏதோ தொலைக்காட்சியில் காட்டுகின்றனர் என்று தாங்களே செய்து பிரச்சினையை ஏற்படுத்திக்கொண்டு விடுவர்.

◆ஒவ்வொருவராலும் இவ்வளவு நிமிடம் வரை நீடிக்க முடியும் என்ற நிலை உண்டு. அதை மீறி உடலை வருத்தி மூச்சுப் பயிற்சி செய்யக் கூடாது.

◆மூச்சுப் பயிற்சி நிபுணரிடம் பயிற்சி பெற்றுத்தான் செய்யவேண்டும். ஏனோதானோ என்று செய்யவே கூடாது.

◆ஏதோ உடற்பயிற்சி என்று முடிந்தால் செய்வது என்று இருக்கக் கூடாது தினமும் செய்ய வேண்டும்.

◆உயர் இரத்த அழுத்தம், அல்சர் போன்ற கோளாறு உள்ளவர்கள், டாக்டர் ஆலோசனை பெறாமல் செய்யவே கூடாது.

**கலோரியை எரிக்கும் சக்தியை கொடுக்கும்**

தினமும் சாப்பிடுகிறோம். மீண்டும் சாப்பிடுகிறோம். தூங்குகிறோம். இப்படி இருப்பவர்களுக்கு உடலில் ஆக்டிவிட்டி என்பது போதுமான அளவு கூட இருக்காது. நாம் சாப்பிடும் உணவால், கொழுப்பும் சேரக் கூடாது கலோரியும் அதிகரித்துவிடக்கூடாது. அதாவது உடலில் அதிக வெப்பம், கொழுப்பு இரண்டும் தான் பல கோளாறுகளுக்கு காரணம்.

இரண்டையும் குறைக்க வோக்கிங் அதாவது, சில நிமிடங்கள் காலை, கையை வீசி நடக்கவேண்டும் என்கின்றனர் டாக்டர்கள். மூச்சுப்பயிற்சியும் கொழுப்பு, கலோரியை குறைப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

# தமிழகம் தொடர்ந்து விழித்திருந்தால் இந்திய அரசு இன்னும் கொஞ்சம் அசையும்

## இல்லையேல் இலங்கை அரசுடன் கைகுலுக்கும் என்கிறார் சோலை



நாம் தொடர்ந்து விழித்திருந்தால் இந் திய அரசு இன்னும் கொஞ்சம் அசையும் இல்லை யேல் இலங்கை இனவாத அரசுடன் தான் கைகு லுக்கும். இதுதான் இதுவரை நாம் கண்ட நடை முறை என்றும் அரசு தனிமைப் பட்டு தவிக் கிறது- இந்தியா என்ன செய்யப் போகிறது என்று தமிழ் நாட்டின் மூத்த ஊடக வியலாள ரும் எம்.ஜி. ஆரின் ஆலோசகரு மான சோலை தெரிவித்துள்ளார்.

குமுதம் குமுமத்தின் றிப்போட்டர் வாரம் இரு முறை இதழில் சோலை எழுதிய கட்டு ரையில்

டில்லியில் இலங்கை தூதுவரை நமது வெளியுறவுச்செயலாளர் சிவசங்கர் மேனன் அழைத்தார். பேச்சுவார்த்தையின் மூலம் ஈழப்பிரச் சினைக்கு சுமூகத்தீர்வு காண வேண் டும் என்பது தான் இந்திய அரசின் நிலை என்ப தனை எடுத் துரைத்தார். செய்தி வந்தது இப் படிச்சென்னது சிவ சங்கர் மேனன் தானா? நம்ப முடியவில்லை.

எந்த இலங்கைப்பிரச்சினை என்றாலும் அங்குள்ள தமிழர்களின் நலனை முன்நிறுத் தித் தான் நேருவும் இந்திராகாந்தியும் முடி

### ஈழப்பிரச்சினையில் இந்திரா வகுத்த பாதையிலிருந்து ராஜீவ் காந்தி காலத்தில் இந்திய அரசு தடம் புரண்டது.

வெடுத்தனர். ஆனால் அதன் பின்னர் ராஜீவ் காந்தி காலத்தில் இந்தியா தடம் புரண்டது. ஈழப்பிரச் சினையில் இந்திரா வகுத்த பாதையி லிருந்து இந்திய அரசு வழுக்குப்பாதையில் அடியெடுத்து வைத்தது.

1987ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப் பந்தம் ஏற்பட்டது. அதன் பின்னர் ராஜீவ் காந்தி இலங்கை சென்றதும் மரியாதை அணி வகுப் பில் நின்ற ஒரு சிங்கள இராணுவ்ச்சிப்பாய் அவரை கொலை செய்ய முயன்றதும் மறக்கக் கூடிய நிகழ்ச்சியா? அதன் பின்னர் இந்திய இரா ணுவம் ஈழப்பரப்பில் இறங்கியது.

ராஜீவ்காந்தி காலத்தில் இலங்கையில் இந் திய தூதராக இருந்தவர்களில் ஒருவர் சிவசங்கர் மேனன் இந்திய உளவுத்துறை தலைவராக இருந்தவர் எம்.கே.நாராயணன் இன்றைக்கு அதே மேனன் இந்திய அரசின் வெளியுறவுச் செயலாளர் எம்.கே. நாராய ணன் பிரதமரின் பாதுகாப்புத்துறை ஆலோச கர். றொமேஸ் பண்டாரி என்பவர் இந்திய வெளி யுறவுச்செயலாளராக இருந்தார். சிங்கள இன வாத அரசு அவரது துணைவியாருக்கு விலை மதிப்பு மிக்க வைர நெக்கிலஸ்சை வாங்கித் தந்ததாக பிரபல இந்திய ஆங்கில ஏடு எழுதி யது.

தீட்சித் என்று இன்னொருவர் தூதுவராக இருந்தார். பிரபாகரனை சுட்டுக்கொல்லும்படி யாழ்ப்பாணத்தில் இருந்த இந்திய இராணுவத் தளபதிகளை நச்சரித்தார். அமைதியை நிலை நாட்ட வந்திருக்கிறோமே தவிர பிரபாகரனை சுட்டுக்கொல்வதற்காக அல்ல என்று தளப திகள் மறுத்தனர். பேச்சுவார்த்தைக்கு பிரபா கரனை அழைத்துவரும்போதே தீர்த்துக்கட் டுங்கள் மேலிடத்து உத்தரவு என்றார். மறுத்து விட்டனர்.

தனிப்பட்ட எவர் மீதும் குற்றம் கூற வேண் டும் என்பதற்காக இந்த நிகழ்வுகளை இப் போது நாம் சுட்டிக்காட்டவில்லை. அன்னை இந்திராகாந்திக்குப்பின்னர் அரியணைக்கு வந்தவர்களுக்கும் அதிகாரவர்க்கத்திற்கும் ஈழமக்களின் நியாயத்தை புரிந்துகொள்ள முடிய வில்லை.சிங்கள இனவாத அரசு ஈழத்தமிழர் களை அழித்திட அடுத்தடுத்து பயங்கரவா தத்தை கட்டவிழ்த்துவிட்டது. இதன் பின்னர் தான் ஈழத்து இளைஞர்கள் போர்க் குணம் கொண்டு புலிப்பாய்ச்சலுக்கு தயாரானார்கள்.

ராஜீவ்காந்தியின் மரணம் சிங்கள இன வாதிகளுக்கும் இங்குள்ள ஈழத்து எதிராளி களுக்கும் ஆயுதமாக கிடைத்தது. அன்னை இந்திராவின் அந்த அருந்தவ புதல்வனின் இழப்பை ஈடு செய்ய முடியாததுதான். இன் றைக்கும் நமது இதயங்களில் இரத்தம் கசிகிறது. ஆனால் அதனையே காரணம் காட்டி ஈழத்தமிழினத்தை அழிக்க வேண் டுமா? அதற்கு துணை போக வேண்டுமா

நடந்துபோன துயரச்சம்பவங்களை கடந்து இனி நடக்கவேண்டிய காரியங்களைக் காண் போம் என்ற மனநிலைக்கு அன்னை சோனி யாவே வந்திருக்கிறார்.

அன்னை இந்திராகாந்தியை பலிகொண் டவன் ஒரு சிக்கியன். அதனைத் தொடர்ந்து ஆத்திரம், ஆவேசத்தில் நடந்த சீக்கியப் படு கொலைக்கு மன்னிப்பு கேட்டுவிட்டோம். ஒரு சீக்கியன் செய்த பாதகச் செயலுக்காக ஒரு இனமே அழியவேண்டுமா? அதனால் தான் ஒரு சீக்கியனையே நாட்டின் பிரதமராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

கடந்த நான்கு ஆண்டுகளாக ஈழத் தமிழ் இனத்தை அழிக்கின்ற வேலைகளை சிங்கள இனவாத அரசு வெறிகொண்டு வேகப்படுத்தி யிருக்கிறது.அதற்காக எத்தனையோ நாடுக ளில் ஆயுதம் வாங்கிக் குவிக்கின்றது. அந்த ஆயுதங்களால் போரை தீர்மானிக்கமுடியாது. ஆனால் இந்திய அரசு சிங்கள இனவாத அர சிற்கு பெரும் சேவகம் செய்திருகின்றது.ஈழப் போராளிகளின் கடல் நடமாட்டத்தைக் கண் காணிப்பதே இந்தியா கடற்படை தான் என்று குற்றச்சாட்டு எழுந்தது.அதனை இலங்கை கடற்படை தளபதியே பகிரங்கமாக அறிவித் தார்.

சிங்கள இராணுவத்தினருக்கு தமிழ் மண் ணிலேயே பயிற்சி அளிக்கப்பட்டது.அந்த அநி யாயம் அம்பலமானதும் சிங்களவர்கள் வடமாநில பயிற்சி நிலையங்களுக்கு அனுப் பப்பட்டனர். கொழும்பிற்கு அருகில் இரணுவத் தளங்கள் மீது ஈழப் போராளிகளின் *சிட்டுக் குருவி* விமானங்கள் தாக்குதல் தொடுத்தன.

அதனைக் கண்டு சிங்களவர் சீற்றம் கொண் டதைவிட நமது இந்திய அதிகாரிகள் தான் அதிக ஆவேசம் கொண்டனர்.எனவே இந்திய- சிங்களக் கூட்டு ரோந்து வேண்டுமென்றனர். அப்படி சொன்னவரே சிவசங்கர் மேனன்தான்.

ஈழத்தில் தினம் தினம் சிங்கள விமானங் கள் குண்டுமாரி பொழிகின்றன. குடியிருப்புக் கள்,பள்ளிகள்,வயல்கள்,கோவில்களை அழிக் கின்றன. குழந்தைகள் காப்பகம் கூட அழிக் கப்பட்டது. அப்போதெல்லாம் எமது இதயங்கள் படபடத்தன. டில்லி அதிகாரிகளே அதற்காக கண்டனம் கூடத் தெரிவிக்கவில்லை. ஆனால் சிங்கள அர்சுக்கோ இராணுவத்தினருக்கோ சேதம் என்றால் எல்லா உதவிகளையும் செய் தனர். இன்றுவரை செய்கின்றனர்.

இதற்கு அவர்களை குற்றம் சாட்டக் கூடாது. நாமே குற்றவாளிக்கூண்டில் நிற்கவேண்டும். இங்குள்ள தமிழர்களிடம் ஒற்றுமை இல்லை. உகண்டாவிற்கும் குஜராத்திற்கும் சோதனை என் றால் கட்சி வேறுபாடின்றி அணிதிரள்கின் றனர். ஜாம்பியாவில் மார்வாடிகளுக்கு ஆபத் தென்றால் மத்தியஅரசே குரல் கொடுக்கின்றது. இப்போது தமிழகம் ஈழத்தமிழர்களுக்காக அணி திரள்கின்றது. முதல்வர் கூட்டிய சர்வகட்சிக் கூட் டத்திற்குப் பின்னர் மத்திய அரசும் சோம்பல் முறிக் கின்றது. அரசியல் மாச்சரியங்களால் இதயங் களை கருக்கிக் கொண்டவர்கள் மனச் சாட் சிக்கு விரோதமாகச் செயற் பட்டு தனிமைப்பட்டு வரு கின்றார்கள். அவர்க ளைப் பற்றி கவலைகொள் ளாது இப்போது உருவாகி யிருக்கும் ஒற்றுமை வலி மைபெறவேண்டும். அந்த வலிமைதான் இந்திய அரசை அசைக்கும். ஈழத் தமிழருக்கு கரம்கொடுக்கும் ஈழத்துக் கதிர வனை மறைக்கும் கார்மேகங்கள் கலையும்.

அங்குள்ள தமிழர்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்க இலங்கை அதி பர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பிரத மர் மன்மோகன் சிங் கேட்டுக்கொண்டிருக்கி றார் என்ற செய்தி வந்தது. அடுத்து நமது வெளி யுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும் பிற் குப் பயணம். ஆஹா! இனி ஈழத்தின் கிழக்கு வெளுத்துவிடும் என்று நம்பினால் ஏமாந்து விடுவோம். அதேசமயத்தில் அவர்களுடைய முயற்சிகளைப் பாராட்டுகிறோம்.

தமிழகத்தில் ஈழப்பிரச்சினை எதிரொலிக் கும் போதெல்லாம் நமது பிரதமர்கள் சிங்கள இனவாத அரசுக்கு வேதாந்தம் சொல்வார்கள். இதற்கு முன்னர் இந்தியாவின் வெளியுறவு அமைச்சர்களாக இருந்த நரசிம்மராவ், நட்வர் சிங் போன்றவர்கள் கொழும்பிற்கு பயணம் செய்து வந்திருக்கின்றனர்.அதனால் என்ன பலன் ஏற் பட்டது?

இராமேஸ்வரத்திற்கு அப்பால் இந்தியக் கட லில் மிதக்கும் நமது போர்க்கப்பல்கள் இடமாற வேண்டும். அதனை நமது பிரதமர் செய்தால் தான் நம்பிக்கை பூக்கும் இந்திய ஆயுதங்கள் அளிப்பது நிறுத்தப்படவேண்டும். அப்போது தான் எல்லோருக்கும் நிம்மதி பிறக்கும்.

ஈழப்போராளிகளை எதிர்த்து சிங்கள இராணுவம் போர் புரிவதை நாம் விமர்சிக்க வில்லை. ஆனால் போராளிகளுடன் போர் என்ற பெயரால் எத்தனை ஆயிரம் அப்பாவி ஈழத்து தமிழ் மக்கள் மடிந்திருக்கிறார்கள்?

ஈழப்போராளிகளின் பாசறைகள் தாக்கப் படு வது பற்றி நாம் கவலை கொள்ளவில்லை. ஆனால் இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள் சிங்கள இனவாத அரசு அநாதைகளாக அகதி களாக கண்ணீரும் கம்பலையுமாக அலைய விட்டு கொன்று குவிப்பதைத்தான் நாம் எதிர்க்கி றோம்.

தமிழகம் தொடர்ந்து விழித்திருந்தால் இந்திய அரசு இன்னும் கொஞ்சம் அசையும். இல்லையேல் சிங்கள இன்வாத அரசுடன் தான் கைகுலுக்கும். இதுதான் இதுவரை நாம் கண்ட நடைமுறை என அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்வராக இருந்த போது கைது செய்யாத ஜெயலலிதா இப்போது மட்டும் கைது-செய்யத் தூண்டுவது ஏன்?

## திருமாவளவன் கேள்வி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்று திரும்பிய போது கைது செய்யாத அப்போதைய முதல்வரான ஜெயலலிதா தற்போதுமட்டும் என்னை கைது செய்ய 'வலியுறுத்துவது ஏன்? என்று விடு



தலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கேள்வி எழுப்பியுள் ளார்.

தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் ஜுனியர் விகடன் வாரம் இருமுறை இத ழுக்கு திருமாவளவன் தெரிவித்துள்ளதாவது,

என்னை ஏன் கைது செய்யவில்லை என்று கேட்கும் ஜெயலலிதாவிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்கள் முதல்வராக அமர்ந்தி ருந்த போது தான் நான் யாழ்ப்பாணத் துக்குப் போய் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு 8 நாட்கள் அங்கேயே தங்கி யிருந்து விட்டுவந்தேன். திரும்பவும் பொடாசட்டம் நடை முறையில் இருந்த போதும் ஒரு மாநாட்டில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் சென்று வந் தேன்.

வெளிப்படையாக அமைந்த அந்த பய ணத்திற்காக அப்போது ஏன் ஜெயலலிதா என்னை கைது செய்யவில்லை?

ஈழத்தமிழர்களின் ஒப்பாரியிலும் அரசி யல் நடத்தும் பெண் தலைவருக்கு தாயுள் ளம் துளியுமில்லை!

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அ.தி. மு.க வை மக்கள் விரோத கட்சியாக நடத்தி அதற் குத் தலைமை தாங்கிக் கொண்டிருக் கிறார். ஈழத்தமிழர்களுக்காக எந்நேரமும் போராடும் அண்ணன் வைகோ இப்போதா வது அ.தி. மு.க. கூட்டணியிலிருந்து வெளி யேறி ஜெய லலிதாவைத் தனிமைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் அது ஈழத் தமிழர் களுக்கு அவர் செய்யும் மிகப்பெரிய உதவி ! என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஓ

# 40 ஆண்டு காலமாக இடம்பெற்று வரும் போரை 4 நாட்களில் நிறுத்தி விட முடியாது

## முதல்வர் கருணாநிதி

(சென்னை)

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மத்திய அரசிற்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வித மாகச் செயற்பட மாட்டோம் என்று தெரிவித் திருக்கும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி 40 ஆண்டு காலமாக இடம்பெற்றுவரும் போரை 4 நாட்களில் நிறுத்திவிட முடியாது என் றும் கூறியுள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து ஞாயி றன்று புதுடில்லில் இடம்பெற்ற பேச்சு வார்த்தை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கலைஞர் கரு ணாநிதியைச் சந்தித்து விளக்கிய பின்னர் அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து இந்திய மத்திய அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் தமக்கு பூரண திருப்தி அளிப்பதாகவும் இந் தியா தமக்கு உறுதியளித்திருக்கும் விடயங் கள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் அவர் ஊடகங்களி டம் தெரிவித்தார்.

இலங்கையில் உடனடியாக போர் நிறுத் தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அப் படி இல்லாவிடில் தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என்றும் கூறியது என்னாயிற்று என்று ஊடகவியலா ளர்ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கரு ணாநிதி 40 ஆண்டுகளாக இடம்பெற்று வரும் போரை 4 நாட்களில் நிறுத்திவிட முடியாது.

—— பொதுமக்களை இன்னல்களிலிருந்து



காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே போரை நிறுத்துமாறு கோரினோம். இப்போது பொது மக்கள் கொல்லப்பட மாட்டார்கள் என்ற உத்தரவா தம் அளிக்கப்பட்டிருக்கிறதுஎன்று குறிப்பிட் டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜி னாமா விவகாரம் அனைத் துக் கட்சி கூட்டத் தில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்பதால் அது குறித்து மீண்டும் கட்சிகள் கூடியே தீர்மா னிக்க முடியும் என்றும் அவர் தெரிவித் தார்.

மேலும் இந்தியாவில் விடுதலைப்புலி கள் இயக்கத்தின் மீதான தடையை நீக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகளின் தலை வர் பிரபாகரன் விடுத்திருக்கும் கோரிக்கை குறித்து கருத்துத்தெரிவித்திருக்கும் முதல் அமைச்சர் கருணாநிதி இது குறித்து மத்திய அரசே தீர்மானம் எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். ஓ

## கிழக்கிலங்கையில் ஆர்ப்பாட்டம்

# இந்தியாவையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற மேற்கொள்ளும் முயற்சி

(கொழும்பு)

வட- கிழக்கில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் மிகக் கொடூரமான போரையும், மனித உரிமை மீறல்களையும் தடுப்பதற்கான தமிழகத் தலைவர்கள் இந்திய மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்து வரும் இந்நிலையில், கிழக்கில் இயங்கும்சில குழுக்கள் தங்களது சுகபோகமான வாழ்க்கைக்கு ஏதாவது பாதிப்புக்கள் ஏற்பட்டு விடுமே எனப் பயந்து கிழக்கு மக்க ளை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தி,

அவர்களை அச்சுறுத்தி ஆர்ப்பாட்டங்களை நடத்தி சர்வதேசத்தினை முக்கியமாக இந்தி யாவினை ஏமாற்ற முயற்சித்து வருவதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சந்திரநேரு தமது அறிக்கை யில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆர்ப்பாட்டத்தினை நடத்துவதற்காக முன்கூட்டியே பொதுமக்களின் வீடுகளுக்கும் அரச, தனியார் அலுவலகங்களுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் சென்ற குழுவினர் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளுமாறும் கடுமையான தொனியில் எச்சரித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு,

காலையில் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக தொழிலுக்குச் செல்பவர்கள், சந்தையில் பொருள் கொள்வனவுக்காக சென்றவர்கள் சகலரும் பலவந்தமாகப் பிடிக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றப்பட்டனர். அத்துடன் , இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான நூற்றுக்கணக்கான பேருந்துகளில் மக்கள் விருப்பமின்றி பலவந்தமாக ஏற்றப்பட்டனர்.

இவை அனைத்தையும் பாதுகாப்புப் படையினர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

பொதுமக்களை மிகவும் அசௌகரியமான நிலைக்கு இக்குழுவினர் தள்ளிய போது எங்களின் விரல்களைக் கொண்டே எங்களது கண்களைக் குத்துகின்றனர் என கவலைப்பட்டுக்கொண்டனர்.

திருக்கோவில் பிரதேசத்தில் இலவசமாக விதைநெல் தரப்போகிறோம் எனக்கூறியே மக்களை குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைத்து பின்னர் அவர்களைப் பலவந்தமாக பஸ்களில் ஏற்றினர்.

இலங்கையிலிருந்து உயர்மட்டக் குழுவினர் இந்தியாவிற்கு புறப்பட்டுள்ள அவ்வேளையில் இந்திய அரசிற்கு அழுத்தத்தினைக் கொடுப்பதற்காக கிழக்கு மக்களைக் கொண்டு ஒரு போலியான ஆர்ப்பாட்டத்தினை நடத்தி, அதனை இந்தியாவிற்கு காட்டும் திட்டமே இவ் ஆர்ப்பாட்டமாகும்.

சிங்கள மக்களைக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வது இந்தியாவில் எடுபடாது என்பதனை அறிந்துகொண்டு கிழக்கின் அப்பாவித்தமிழ் மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில், எவ்வித சதிவலைக் குள்ளும் இந்திய அரசு வீழ்ந்து விடக் கூடாது. (ஓ)

# இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த 15 சிங்கள மீனவர் கைது

## மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவில் மேல் நடவடிக்கை

(சென்னை)

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 15பேர் கைதுசெய்யப்பட்டனர். கடலோர காவல்படையினர் நேற்றுமுன்தினம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது பாண்டிச்சேரிக் கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்த இரண்டு இலங்கை படகுகளையும் மசூலிப்பட்டினம் அருகே ஒருஇலங்கைப் படகையும் மடக்கிப் பிடித்தனர்.

இந்த மூன்று படகுகளிலும்மொத்தம் 15 சிங்கள மீனவர்கள் இருந்தனர். சென்னைக்கு கிழக்கே இந்திய கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அவர்கள் பிடிபட்டனர்.

அவர்களை கடலோரக் காவல்படையினர் ராயபுரம் காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர். அவர்கள் மீன்பிடிக்க பயன்படுத்திய படகுகளும் பொலிஸாரிடம் அளிக்கப்பட்டன.

அவர்களை பொலிஸார் கைதுசெய்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் 15பேரும் ஒரு திருமண மண்டபத்தில் தங்கவைக்கப் பட்டனர்.

மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவிற்கேற்ப மேல் நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸார் தெரிவித்தனர். (ஓ)

# தேசிய, சர்வதேச ரீதியாக முன்னெடுக்கப்படும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக செயற்படத்தயார்

## ஜனாதிபதிக்கு ஜே.வி.பி'யின் பொதுச்செயலர் கடிதம்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் அரசியல் உபயம், தலையீடுகள் தொடர்பில் நாட்டிற்கு தெளிவுபடுத்தி அபாய சமிஞ்சைகளை நாம் காண்பித்த போதும் அதற்கு எதிராக அரசாங்கம் எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எனினும் உள்ளூர் விவகாரங்களில் தேசிய சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் அழுத்தங்களுக்கு எதிராக செயற்படுவதற்கு நாம் எந்நேரமும் தயாராகவே இருக்கின்றோம் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பை நிராகரித்தமை தொடர்பில் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கடித்ததில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் எங்கள் கட்சியுடனும் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம் கிடைத்தது மற்றும் அழைப்பித் தொடர்பில் விளக்கமளிக்கவேண்டியுள்ளது.

அழைப்புக்கடிதத்தில் நாட்டின் தற்போதைய நிலைவரம் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மிக முக்கியமான காரணங்கள் தொடர்பில் அக்க்டிதத்தில் எவ்விதமான விளக்கமும் இல்லை. காரணமும் குறிப்பிடப்படவில்லை.

நாடு தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் பல்வேறு அசௌகரியங்க ளுக்கு முகம் கொடுத்துக்கொண்டி ருக்கின்றனர். அது மட்டுமல்லாது அவர்கள் கைத்தொழில் மற்றும் வியாபார நடவடிக்கை களை கொண்டு நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கத்திற்கு இயலாமல் போனது தொடர்பில் எமது கட்சி பல்வேறு அமைப்புகளினூடாக சாதாரண யோசனைகள் மற்றும் கருத்துக்களை முன்வைத்த போதிலும் அவை தொடர்பில் அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

இதேவேளை இலங்கையும் உள்ளூர் பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு பாராதூரமான முறையில் இருக்கின்றது என்றே எமக்கு தெரிகின்றது. பிரிவினை வாத பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக இந்தியா கடந்த காலங்களில் உண்மையாகவே உதவ வில்லை. பொருளாதாரம் மற்றும் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்திய இலங்கையின் இனப்பிரச்சினையை பயன்படுத்திக் கொண்டது.

அதன் மூலமாக இந்தியா இலங்கையில் பொருளாதாரம் அரசியல் ரீதியாக பல்வேறு வரப்பிரசாதங்களை பெற்றுக்கொண்டுள்ளது. ஆட்சியிலிருக்கும் உங்கள் அரசாங்கம் தேசிய சொத்துக்கள் பலவற்றை இந்தியாவுக்கு கப்பமாக வழங்கியுள்ளது.



இந்திய அரசாங்கத்தின் அரசியல் உபாயம் தலையீடுகள் தொடர்பில் நாட்டிற்கு நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். அபாயசமிக்ஞைகளையும் காண்பித் துள்ளோம் .

எனினும் அதற்கு எதி ராக அரசாங்கம் எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதையும் நாம் அறிவோம்.

முன்னணிகளின் எதிர்பலைகள் மற்றும் மக்களின் எதிர்ப்புகளைக்கண்டுகொள்ளாது தற்போது உள் விவகாரங்களில் தலையிட்டுக்கொண்டிருக்கின்ற நாட்டுடன் அரசாங்கம் உண்மையான அன்பை செலுத்திக்கொண்டிருக்கின்றது.

எவ்வாறான காரணங்கள் இருப்பினும் தாய் நாடு, மக்களுக்கு எதிராக தேசிய சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் எந்த வொரு அச்சுறுத்தல்களுக்கும் எதிராக செயற்படுவதற்கும் தாய்நாட்டின் சுதந்திரம் இறைமை மக்களின் கௌரவம் ஆகியவற்றிற்காக எம்மால் செய்ய முடிந்ததை செய்வதற்காக எந்த நேரத்திலும் தயாராகவே இருக்கின்றோம்.

தனிப்பட்ட இலாபத்தை நோக்காகக் கொண்டு செயற்படாமல் உண்மையாய் நாட்டிற்காகவே செயற்படுவோம். தாய்நாடு மக்களுக்காக ஊடக அறிக்கைகள் உறைகள் மூலமாக மட்டுமல்லாது பொறுப்புடன் நடைமுறையிலும் செயற்படுத்துவதற்கு எந்தச்சந்தர்ப்பத்திலும் நாம் தயாராகவே இருக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# விமான நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய பெரியார் திராடவிட கழகத் தலைவர் கைது

(திருச்சி)

இலங்கைத் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து திருச்சி விமான நிலையத்தில் இலங்கை விமானத்தை தரை இறங்க விடாமல் தடுக்க முயன்ற பெரியார் திராவிடக் கழக மாவட்டத்தலைவரை பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கை விமானங்களை தமிழ் நாட்டு விமான நிலையங்களில் அனுமதிக்கக் கூடாது என்று மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தியும் திருச்சி மாவட்ட பெரியார் திராவிட கழகத்தினர் திருச்சி விமான நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதோடு திருச்சி விமான நிலையத்தில் தரையிறங்கும் இலங்கை விமானத்தை மறிக்கப்போவதாகவும் பெரியார் திராவிட கழகத்தினர் அறி வித் திருந்தனர்.

பெரியார் திராவிட கழகத்தினர் வருவார்கள் என்று கருதி திருச்சி விமான நிலையத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி தலைமையில் 100ற்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் விமான நிலையத்திற்குள் கறுப்புச்சட்டை அணிந்த பயணி ஒருவர் உள்ளே செல்ல முயன்றார் அவரை பொலிஸார் தடுத்துவிசாரித்தனர். பின்னர் அவர் பெரியார் திராவிட கழகத்தை சேர்ந்தவர் அல்லர் என்பது தெரிந்ததும் பொலிஸார் அவரை விமான நிலையத்திற்குள் உள்ளே செல்ல அனுமதித்தனர்.

அதேபோல விமான நிலைய பகுதிக்குள் கறுப்புச்சட்டை அணிந்தவர்கள் யார் வந்தாலும் கைது செய்ய வேண்டும் என்று பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டம் நடத்துபவர்களை தடுக்க வெகு நேரம் பொலிஸார் காத்திருந்தனர்.

**மாவட்ட தலைவர் கைது**

இந்த நிலையில் திருச்சி பெரியார் திராவிட கழக மாவட்ட தலைவர் செ.த. ராஜேந் திரன் தனி ஆளாக கையில் கட்சியின் கொடியை ஏந்தி விமான நிலையத் திற்குள் நுழைய முயன்றார். அவருடன் தொண்டர்கள் யாரும் வரவில்லை. உடனே பொலிஸார் விரைந்து சென்று ராஜேந்திரனை கைது செய்தனர். (ஓ)

# அமைச்சர் சந்திர சேகரனின் கருத்துக்கு விளக்கம் கோர

## பிரதமர் தலைமையில் குழு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அநீதி ஒழிப்பு அமைச்சருமான பெ.சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.

கருதுக்கள் தொடர்பில் விளக்கம் கோருவதற்கு பிரதமர் ரட்ண சிறி விக்ரம நாயக்க தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள இந்த விசேட குழுவில் சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபாலடிசில்வா ஆளுங்கட்சி பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் அடங்குகின்றனர்.

ஜப்பான், சீனாவிற்கு விஜயங்களை மேற்கொண்டுள்ள பிரதமர் ரட்ணசிறி விக்கரம நாயக்க நாடு திரும்பியதன் பின்னரே அமைச்சரிடம் விளக்கம் கோரப்படவுள்ளதாகவும் அமைச்சரினால் தெரிவிக்கப்படுகின்ற விளக்கம் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

பண்போடு பொருந்தாத அனுதாபம் எல்லாம் மறை முகமான சுயநலமே ஆகும்.

– கோலரிட்ஜ்

வலம்புரி

# ஈழத் தமிழரின் அவல மேடையில் இந்தியா அரங்கேற்றும் நாடகம்

பேச்சுவார்த்தை மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என இந்திய மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி, தமிழக முதல்வர் கருணாநிதியிடம் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்று அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்ததையடுத்து காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, தமிழக முதல்வர் கருணாநிதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்களை அமைச்சர் பிரணாப் முகர்ஜி சந்திப்பார் எனக் கூறியிருந்தார்.

அந்தச் செய்தியோடு பிரணாப் முகர்ஜி, கருணாநிதியைச் சந்தித்தார். சந்திப்பின் முடிவு என்ன? என்பது தெரியாது. ஆயினும் பேச்சுவார்த்தை மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என முகர்ஜி உத்தரவாதம் அளித்ததாக கருணாநிதிய மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

நல்ல விடயம், பேச்சுவார்த்தை ஒன்றுதான் யுத்தத்தை நிறுத்தவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் உதவும். எனினும் இது எப்போது சாத்தியமாகும் என்பதே இப்போது இருக்கும் கேள்வி.

அதாவது இலங்கை இனப்பிரச்சினை தொடங்கிய காலத்திலிருந்து பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என எல்லோரும் கூறிக் கொள்கின்றார்கள். ஆனால் யுத்தத்தைத் தவிர வேறு எதுவுமே நடப்பதாக இல்லை.

இலங்கையின் ஆட்சியாளர்கள் கூட பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறிக் கொண்டே யுத்தத்தை முன்னகர்த்திச் செல்கின்றனர். அப்படியானால் பேச்சுவார்த்தை எப்போது? பேச்சுவார்த்தை யாருடன்?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு பேச்சுவார்த்தை மூலமே என்றால் அடுத்த கணமே யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தம் நடந்து கொண்டேயிருக்கின்றது.

மக்கள் இடம்பெயர்ந்து அவல வாழ்வில் சிக்கித் தவிக்கின்றனர். கூடவே மழை காலம் அவர்களின் இடப்பெயர்வை மேலும் துன்பத்திற்கு ஆளாக்கியுள்ளது.

இந் நிலையில் பிரணாப் முகர்ஜியை பசில் ராஜபக்ஷ சந்தித்ததும், உங்களைப் பிரணாப் முகர்ஜி நேரில் வந்து சந்திப்பார் என கருணாநிதிக்குச் சோனியா காந்தி தொலைபேசியில் கூறிக் கொண்டதும், அதன் பிரகாரம் முகர்ஜி அவரைச் சந்தித்ததும் இலங்கைத் தமிழர்படும் அவல மேடையில் இந்திய மத்திய அரசு அரங்கேற்றிய அற்புதமான நாடகமாகும்.

இந்திய மத்திய அரசைத் தலையிடுமாறு வலியுறுத்தித் தமிழக முதல்வர் கருணாநிதி உட்பட தமிழக அரசியல் கட்சிகள் மற்றும் திரைப்பட நடிகர்கள், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் அகிம்சைப் போராட்டங்களைத் தமிழகத்தில் நடத்தினர்.

இருந்தும் சோனியா காந்தி ஆறுதலுக்கேனும் கலைஞருடன் தொலைபேசியில் கதைத்திருக்கலாம் அல்லவா? இச் சந்தர்ப்பங்களையெல்லாம் தட்டிக் கழித்த அவர் பசில் ராஜக்ஷ, அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்தவுடன் எதற்காகக் கருணாநிதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

ஆக, பசில் ராஜபக்ஷ இந்திய மத்திய அரசுக்கு ஏதோ ஒரு விளக்கத்தைக் கொடுத்துள்ளார். அந்த விளக்கத்துக்கு இணங்கிய மத்திய அரசு கருணாநிதியைச் சமாளிப்பதில் கரிசினை கொண்டுள்ளது.

கருணாநிதியும் மத்திய அரசு கவலைப்படும் வகையில் எதுவும் செய்ய மாட்டேன் என பிரணாப் முகர்ஜியிடம் உறுதியளித்துள்ளார். இந்திய மத்திய அரசுக்கு இதுபோதும்.

பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் மூலம் வன்னி மக்களின் அவல நிலையை நீடிப்பதற்கான 'இந்திய அங்கீகாரம்' இலங்கை அரசுக்குக் கிடைத்துள்ளது எனலாம்.

# சகல சௌபாக்கியம் நல்கும் கேதார கௌரி விரதம்



தென்நாட்டுச் சைவம் எனப்போற்றப்படும் சைவ சித்தாந்தம் கூறும் பரம்பொருள் சிவனாகும். சிவனின் அருள் வேண்டி அனுஷ்டிக்கப்படும் விரதங்கள் பல இருந்த போதிலும் கேதாரகௌரி விரதம் பலவகையிலும் சிறப்புடைய விரதமாகக் கொள்ளப் படுகின்றது. பக்தர்கள் இவ்விரதத்தினை மன ஒருமைப்பாட்டுடனும் புனித நோக்குடனும் என்ன வரம் வேண்டி அனுஷ்டிக்கிறார்களோ அந்தந்த வரங்களை அம்பாளின் வேண்டுகோளிற்கு இணங்க சிவன் மிக விரைவாகவே கொடுத்துவிடுவார் என்பது பலரது அனுபவ உண்மையாகும். இதனைவிட சர்வலோக மாதாவாகிய பார்வதி தேவியே இந்நோன்பினை முதன் முதலில் அனுஷ்டித்து பரம்பொருளின் இடது பாகத்தினைப் பெற்றுக்கொண்டார் என்பதும் இவ்விரதத்திற்கு வழங்கப்படும் அடுத்த சிறப்பாகும். ஆண், பெண் என்ற வேறு பாடோ வயதுவேறுபாடோ இன்றி வாழ்க்கையின் எந் நிலையில் இருப் போரும் இன் நோன்பினை தமக்கு வேண்டிய வரங்களை வேண்டி அனுஷ்டித்து இக, பர இன்பத்தினைப்பெற்று இன்புற்று வாழ வழி செய்கின்றது. இத்தகைய சிறப்பு பெற்ற ***கேதாரகௌரி விரதம்*** பற்றி ஓர் புராண வரலாறுஉண்டு.

ஒரு தடவை கைலாயங்கிரியில் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனத்தில் பரமேஸ்வரனும் பார்வதி தேவியும் வீற்றிருந்தனர். இவ்வேளை பிரம்மா, விஷ்ணு, தெய்வேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், அட்டதிக்குப் பாலகர்களும், முனிவர்களும், பதினெண்ணாயிரம் ரிஷிகள் என்போரும் இருவரையும் மூன்று தடவை பிரதர்சனம் செய்து வணங்கிச் சென்றனர்.

ஆனால் முனிவர்களுக்குள் ஒருவர் மட்டுமே பார்வதி தேவியை வணங்காது பரமேஸ்வரனை மட்டுமே வண்டின் உருவம் எடுத்து 3 தடவை வலம் வந்து வணங்கினார். வண்டின் உருவம் பெற்று பரமேஸ்வரனுக்கும் பார்வதி தேவிக்கும் இடையில் சென்று பரமேஸ்வரனை மட்டுமே வலம் வந்து வணங்கினார். வண்டின் உருவம் பெற்றதால் இம் முனிவர் ***பிருங்கி முனிகள்*** என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். பிருங்கி என்றால் வண்டு.

பிருங்கி ரிஷியின் இச் செய்கையைக் கண்டு கோபமுற்ற பார்வதி தேவிபரமேஸ்வரனிடம்காரணம்கேட்கபரமேஸ்வரனும்அர்த்த புஷ்டியான ஒரு புன்முறுவலுடன் பின்வருமாறு கூறினார். தேவி! பிருங்கி முனிவர் உலக இன்பத்தை நாடுபவர் அல்ல மாறாக மோட் சத்தை நாடுபவர்.

மோட்சத்தை நாடும் அவர் உலக இன்பங்களை நல்கும் உன்னை வணங்காது மோட்சத்தை நல்கும் என்னை வணங்கியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே தேவி எனக்கூற இதனைக் கேள்வியுற்ற லோகமாதா மேலும் கோபமுற்றவளாக எனது சக்தி இல்லாமல் மோட்சத்தை நாடும் உங்கள் பக்தரான பிருங்கி முனிவர் மோட்சத்தை அடைய முடியாது என்பதுடன் இங்கிருந்து ஒரு அடி கூட எடுத்து வைத்து தனது இருப்பிடத்தை கூட அண்ட முடியாது அவ்வாறான சக்தியைக்கொடுக்கும் என்னை ஏளனம் செய்தாய் ஆதாலல் நிற்க முடியாமல் போகக் கடவாய் என முனிவருக்கு சாபம் கொடுத்தார். நிற்க முடியாது சக்தி அனைத்தையும் இழந்த முனிவர் தள்ளாடிய வாறே நிலத்தில் விழப் போனார். இந்நிலையில் என் பக்தனைக் காப்பாற்றுதல் என் தர்மம் எனக்கூறி பிருங்கி முனிவரின் கையில் தண்டு (ஊன்றுகோல்) ஒன்றை சிவன் கொடுத்தார். தண்டினைப் பெற்றுக் கொண்ட முனிவர் சிறிது சக்தியைப் பெற்றவர் போல் லோக நாயகனுக்கு கோடானு கோடி வணக் கும் என மீண்டும் பரமேஸ் வரனை மட்டும் வணங்கி தனது ஆச்சிரமத்தை அடைந்தார்.

இதனைக் கண்ட லோகமாதா பிருங்கி முனிவர் மட்டு மன்றி தனது கணவரான பரமேஸ்வரனும் தன்னை அவமதித்துவிட்டார் என்ற கொடிய கோபத்தில் மற்றவர்கள் முன்பு என்னை அவமதித்த உங்களுடன் இனி நான் வாழப் போவதில்லை எனக்கோரி ஸ்ரீ கைலாசத்தை விட்டு வெளியேறி பூலோகத்திற்கு வந்து வால்மீகி மஹரிஷியின் தபோவனத்தில் ஒரு வில்வ மரத்தடியில் தங்கினார். 12 ஆண்டுகளாக மழையில்லாமல் வனத்தில் இருந்த மரஞ்செடி கொடிகள் எல்லாம் காய்ந்து வாடி வதங்கி காணப்பட்டன.

ஆனால் ஆதிபராசக்தியின் அம்சமான பார்வதி தேவியின் திருப்பாதங்கள் அவ்வனத்தில் பட்டதும் மரஞ்செடி கொடிகள் எல்லாம் புத்துயிர் பெற்று தளிர்த்தன மல்லிகை, முல்லை, மந்தாரை, பாரியாதம் போன்ற செடிகள் பூர்த்துக்குலுங்கியதுடன் அவற்றின் நறு மணம் வனாத்தரத்தின் நாற்திசையும் வீசுவதைக்கண்ட வால்மீகி மஹரிஷி தனது ஞானக்கண்ணால் தனதுஆச்சிரமம் அடைந்துள்ள வனத்தில் பரமேஸ்வரி எழுந்தருளி உள்ளதை கண்டார்.

முனிவர் பார்வதி தேவி எழுந்தருளி உள்ள வில்வமரத்தடிக்கு வந்து ஆச்சரியத்துடன் தேவியை நோக்கி மும்மூர்த்தி களிலும் முதல் பொருளே! லோகமா தாவே! முக்கண்ணரின் தேவியே! முப்பது முக்கோடி தேவர்களுக்கும் தேவியே! தாங்கள் பூலோகம் வந்து சிறி யோனின் பர்னசாலை அமைந் துள்ள வனத்தில் எழுந்தருளி இருப்பதற்கு யான் என்ன தவம் செய்தேனே எனக் கூறி அன்னையைமெய்சிலிர்க்க வணங்கி தாயே! தாங்கள் பூலோகம் வந்ததற்கான காரணத்தை அடியேன் அறிந்துகொள்வதில் தவறு ஒன்றும் இல்லையே ? என வினாவி மீண்டும் வணங்கி நின்றார்.

அதற்கு பார்வதி தேவி பிரிங்கி முனிவரின் அலட்சியத்தால் கோப முற்ற நான் பிரியக்கூடாத என் நாதனை விட்டுப்பிரிந்து மிகவும் நீண்ட தூரம் வந்துவிட்டேன் என தனது தவறை உணர்ந்து கவலையுடன் கூறினார். வால்மீகிமுனிவர் பரமேஸ்வரியை தனது ஆச்சிரமத்திற்கு அழைத்துச்சென்று நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட இருக்கையில் அமரச்செய்து தினமும் வணங்கி வந்தார்.

இவ் வேளை பார்வதி தேவியானவள் வான்மீகி முனிவரை நோக்கி தனது அறிவீனத்தால் என் சுவாமியைப்பிரிந்து இங்கே (தற்போது தென்னிந்தியாவில் உள்ள மாங்காட்டு அம்மன் ஆலயம்) வந்துவிட்டேன் எனவே இவ்வுலகில் இதுவரை யாரும் அனுஷ்டிக்காத ஒருவிரதத்தினை அனுஷ்டித்து இறைவனை மீண்டும் அடைந்து ஆறுதல் அடைய விரும்புகின்றேன். எனவே அவ்வாறான விரதமிருப்பின் கூறும்படி கேட்டார்.

அதற்கு வால்மீகி பின்வருமாறு கூறினார். தாயே! இவ்வுலகில் இது வரை யாரும் அனுஷ்டிக்காத விரதம் ஒன்று உள்ளது. அதனை மெய் அன்புடனும் பயபக்தியுடனும் அனுஷ்டித்தால் விரதமுடிவில் பரமேஸ் வரனின் அருள் பூரணமாகக்கிடைக்கப் பெறுவீர்கள் எனக் கூறி அத்தகைய சிறப்புப்பெற்றதும் யாராலும் இதுவரை அனுஷ்டிக்கப் படாததுமான விரதம் கேதாரகௌரிவிரதம் எனக்கூறி இவ் விரதத்தின் போது கடைப்பிடிக்கவேண்டிய் விரத நியதிகளை பின்வருமாறு கூறுகிறார்.

புரட்டாதி மாதம் சுக்கிரபட்ச தசமி தொடக்கம் ஐப்பசி மாத கிருஷ்ண பட்சத்து தீபாவளிதிருநாளான அமாவாசை வரை 21 நாள் பிரதித் தினமும் நீராடி சுத்தமான ஆடை அணிந்து ஆலமரத்தின் கீழ் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து 21 வாழைப்பழம், 21 பாக்கு, 21 வெற்றிலை, 21 மஞ்சள், 21 அதிரசம் நோன்பு நூல் என்பவற்றை நெய்வேத்தியமா கப்படைத்துவழிபடல் வேண்டும் என்று கூறினார். சிவனை மனதில் தியானம் செய்து விதிப்படி வணங்கியதால் 21ஆம் நாள் அம்பிகையின் விரத்தில் மகிழ்ந்து அம்பாளின் முன் தேவ கணங்கள் புடைசூழ ரிஷபவாகனத்தில் பூலோகத்தில் அம்பிக்கை முன் காட்சி கொடுத்து தனது இடதுபாகத்தை ஈஸ்வரிக்குக் கொடுத்து அர்த்த நாரீஸ்வர மூர்த்தம் பெற்று கைலாயம் சென்றார்.

இத்தகைய சிறப்புப்பெற்ற விரதத்திற்கு இப்பெயர் வரக்காரணம் உண்டு. கேதாரம் என்பது இமயமலைச்சாரலில் உள்ள ஒரு சிவ தலம். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனை நினைத்து பார்வதி தேவியாகிய கௌரி இவ்விரதத்தை மேற்கொண்டதால் இப் பெயர் உண்டாயிற்று. இவ்விரத முடிவில் 21 இழையிலான காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் முழங்கையிற்கும் தோற்பட்டைக்கும் இடையில் கட்டுதல் வேண்டும். மேலும் முதல் இருபது நாளும் சூரியன் அஸ்தமனத்தின் பின் உண வருந்தி இறுதி நாளாகிய சதுர்த்தசி அன்று உபவாசம் இருந்து மறுநாள் காலை சூரியன் உத யத்திற்கு முன்னர் பாரணம் பண்ணி விரதத்தை முடித்தல் வேண்டும். இத்தகயை சிறப்பு வாய்ந்த விரத்தினை திருமாள் அனுஷ்டித்து வைகுந்த பதவியை பெற்றதுடன் பிரம்மன் அனுஷ்டித்து உலகைப்படைக்கும் உயர் பதவியை பெற்றார். இந்திரன் அனுஷ்டித்து பொன்னுலகை ஆண்டு வெள்ளை யானையினையும் வாகனமாகக் கொண்டார்.

**அடியவன்**

இவ்விரத்தின் மகிமையை இது தான் என யாராலும் வரையறுத்துக்கூற இயலாது. இவ்விரதத்தினை அனுஷ்டிப்பதால் ஐஸ்வரியம் பெருகும். வறுமை ஒழியும் நினைத்த காரியம் கைகூடும் என்பது அனுபவ உண்மை. எனவே நாமும் இவ் அரிய நோன்பினை நோற்று பரம் பொருளின் பூரண கடாட்சத்தைப்பெற்று

**வையத்துள் வாழ் வாங்கு வாழ் வோமாக.**

## அவுஸ்திரேலியா குடியேற்றவாசிகளின் தொகையைக் குறைக்க திட்டம்

உலக நிதிநெருக்கடிகள் காரணமாக வேலையின்மைப்பிரச்சினை அதிகரிக்குமானால் அவுஸ்திரேலியாவுக் குள் நுழைய அனுமதிக்கப்படும் வெளி நாட்டு குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையைக் குறைக்கநேரிடும் என அந் நாட்டு குடிவரவு அமைச்சர் கிறிஸ் இவான்ஸ் எச்சரித்துள்ளார். குடியேற்ற வாசிகளின் குறைப்பு தொடர்பான தீர்மா னம் எதிர்வரும் மாதம் மத்தியஆண்டு நிதி அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின் னர் எடுக்கப்படு மென அவர் தெரிவித்தார். வேலையின்மைப் பிரச்சினை ஏற்படுமானால் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தை சீரமைக்க நேரிடும் என கிறிஸ் இவான்ஸ் வலியு றுத்தினார். 2008/2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் அவுஸ்திரேலி யாவுக்கு சுமார் 1இலட்சத்து 90 ஆயிரத்து 300 குடியேற்றவாசிகள் வருகை தருவார்கள் என எதிர்வுகூறப் பட்டுள்ளது. ஓ

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

# உன்னை முதலில் மாற்றிக்கொள்



புறவுலகை ஆள்வது அகவுலகம் தான் என்பதை முன்பு கண்டோம். உள்ளம் மாறினால் உலகமும் மாறிவிடும். உங்கள் உள்ளம் தூய்மையானால் உலகமும் தூயதாகியே தீர வேண்டும் இந்த உண்மையை உலகுக்குக் கூற வேண்டிய அவசியம் முன்பு என்றும் இல்லாத அளவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. நாம் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் விவகாரங்களில் இப்பொழுது அதிக அக்கறை கொள்ளத் தொடங்கிவிட்டோம்;ஆனால் நம்மைப்பற்றிய விஷயங்களில் நமது கவனம் குறைந்து கொண்டே வருகிறது.

நாம் மாறினால் உலகம் மாறும் நாம் தூயவர்களானால் உலகமும் தூய்மையாகும். மற்றவர்களிடம் நான் ஏன் தீமையைக் காண்கிறேன் என்பது தான் கேள்வி. நான் தீயவனாக இல்லாமல் பிறரிடம் தீமைகாண முடியாது. நான் பலவீனனாக இல்லாமல் துன்பப்பட முடியாது. நான் குழந்தையாக இருக்கும் பொழுது எனக்குத் துன்பம் தந்தவை இப்பொது துன்பம் தருவதில்லை. நான் மாறி விட்டேன் புறப் பொருட்களும் மாறிவிட்டன. வேதாந்தம் இதைத்தான் சொல்கிறது.

இவ்வாறு தனக்குத்தானே கட்டுப்பாடு உள்ளவன் மீது வெளியிலுள்ள எதுவும் ஆதிக்கம் செலுத்த முடியாது. அவனிடமிருந்து அடிமைத்தனம் விடை பெற்றுவிடுகிறது. அவனது மனம் சுதந்திரமாகி விட்டது. அத்தகையவன் மட்டுமே இந்த உலகில் நன்றாக வாழ்வதற்குத் தகுதி உடையவன்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# இந்தியாவின் தலையீடு இல்லாமல்...

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் இந்த விடயம் தொடர்பாகத் தொடர்ச்சியாக நாங்கள் உரையாடி வந்திருக்கின்றோம். இறுதியாக நடைபெற்ற அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதத்தின்போது இதுபற்றித் தெளிவாக நான் நாடாளுமன்றத்தில் பேசியிருந்தேன்.

இது அனைத்துலக மனித உரிமைகளை, அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களையும் உரிமைகளையும் மீறுகின்ற ஒரு செயல். இது இனப்படுகொலைக்குச் சமனானது எனக் கூறியிருந்தேன்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இனப்படுகொலை ஒரு தொடர் கதையாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. தொடர்ந்தும் அனைத்துலக சமூகம் இதில் மௌனம் சாதிக்கக் கூடாது.

அவர்கள் இந்த விடயங்களைத் தமது கவனத்தில் எடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நாங்கள் கேட்டிருந்தோம்.

இந்தியாவும் தற்போதைய நிலைமையை உணர்ந்து இந்த நிலைமை தொடர முடியாது என்றொரு நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றது என்று தோன்றுகின்றது. சுருக்கமாகச் சொல்லுவதாக இருந்தால் இலங்கை அரசாங்கம் இந்தப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மக்களை அந்த நாட்டுக் குடிமக்களாகக் கருதவில்லை.

அவர்கள் இந்த நாட்டுக் குடிமக்களே அல்ல; அந்நியர்கள் என்ற அடிப்படையில் தான் இலங்கை அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. இதை நாங்கள் நாடாளுமன்றத்தில் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 2009 ஏப்ரலில் 5 ஆண்டுகளை நிறைவு செய்கின்றது. இந் நிலையில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறுமானால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் த.தே.கூ. போட்டியிடக் கூடிய நிலை இருக்கின்றதா? அத்தகைய உகந்தசூழல் ஒன்று உருவாவதற்கான அறிகுறிகள் இருக்கின்றதா?

எதிர்காலத்தைப் பற்றி இப்போது நான் பேச விரும்பவில்லை. ஆனால் தமிழ்பேசும் மக்கள் நாடு சுதந்திரமடைந்த காலம் முதல் தந்தை செல்வாவினுடைய தலைமையின் கீழ் குறிப்பிட்ட சில கொள்கைகளை முழுமையாகப் பின்பற்றி, கைப்பற்றி அவற்றைப் பின் தொடர்ந்து வந்திருக்கின்றார்கள். அதை முன்னெடுத்து வந்திருக்கின்றார்கள்.

அதாவது தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம். அவர்கள் சரித்திர ரீதியாகத் தமிழ்பேசும் முஸ்லிம் மக்களுடன் இணைந்து வட கிழக்கில் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். அந்தப் பகுதிகளில் அவர்கள் எப்பொழுதும் பெரும்பான்மையான இருந்து வந்திருக்கின்றார்கள்.

ஒரு கால கட்டத்தில் அவர்கள் மிகவும் பெரிய பெரும்பான்மையாக இருந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் அந்த மக்களுக்கு அந்தப் பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துண்டு. இதுதான் எங்களுடைய அரசியல் சித்தாந்தம். இதிலிருந்து தமிழ் மக்கள் இன்னமும் மாறவில்லை என்பது என்னுடைய கருத்து.

**ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பில் அனைத்துலக சமூகத்துடன் தொடர்புகளைப் பேணி வருகின்றவர் நீங்கள். தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக அனைத்துலகம் எத்தகைய தீர்வைப் பரிந்துரைக்கின்றது. இது தொடர்பில் முன்னைய நிலைப்பாட்டிலிருந்து ஏதும் மாற்றங்கள் தெரிகின்றதா?**

அனைத்துலக சமூகம் எப்பொழுதும் பேச்சுவார்த்தை மூலமாக ஒரு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்கின்ற கருத்தைத்தான் முன்வைத்தது. முன்வைத்துக் கொண்டு வருகின்றது. இந்தியாவும் அந்த நிலைப்பாட்டைத் தான் பின்பற்றி வந்திருக்கின்றது.

ஆனால் எங்களுடைய சந்திப்புக்களின் போது கடந்த சில வருடங்களாக நாங்கள் ஒன்றை மிகவும் தெளிவாகக் கூறி வருகின்றோம். அரசியல் தீர்வு, இலங்கையினுடைய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்பவை வெறும் முழங்கங்களாக இருக்க முடியாது. அவற்றுக்கு ஒரு அர்த்தம் இருக்க வேண்டும்.

இலங்கையினுடைய ஒற்றுமை, ஒருமைப்பாடு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டில் வாழுகின்ற சகல மக்களுக்கும் அவர்களுக்குரிய அரசியல் அங்கீகாரம் கிடைக்க வேண்டும். கிடைக்காமல் அதைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. இதைப் பற்றி பாரதப் பிரதமருக்குக் கூட நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

பாரதப் பிரதமர் மன்மோகன் சிங்கை நாங்கள் சந்தித்தபோது இந்த விடயங்களை அவரிடம் நான் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கின்றேன்.

**நீங்கள் பாரதப் பிரதமரை மீண்டும் சந்திக்க இருப்பதாகத் தெரிகின்றது. இந்தச் சந்திப்பில் எதுபற்றிக் கதைக்க இருக்கின்றீர்கள்?**

பேச வேண்டிய விடயங்கள் சகலவற்றையும் பற்றிப் பேசுவோம். பாரதப் பிரதமரைச் சந்திக்கும்போது அது பற்றிப் பார்ப்போம். அது பற்றி இப்போது சொல்ல முடியாது. அது அநாகரிகமாக இருக்கும். ஆனால் பாரதப் பிரதமரோடு பேச வேண்டிய அத்தனை விடயங்களையும் ஒளிவுமறைவின்றி மிகவும் தெளிவாக மிகவும் உறுதியாகப் பேசுவோம்.

**தமிழர்கள் பிரிந்து போக விரும்புகின்றார்கள். இந்தியாவோ ஐக்கிய இலங்கைக்கு உள்ளேயே தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலையில் இந்தியாவின் அனுசரணையுடன் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது சாத்தியமா?**

இந்தியாவை நாங்கள் ஒருபோதும் ஒதுக்கி வைக்க முடியாது. எங்கள் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணுவதில் இந்தியாவுக்கு முக்கியமான பங்கு இருக்கின்றது. அந்தப் பங்களிப்பை இந்தியா செய்ய வேண்டும்.

இந்தியா எமது பக்கத்தில் நிற்காதுவிட்டால் அனைத்துலக சமூகம் எங்கள் பக்கத்தில் நிற்காது. அமெரிக்காவோ, ஐரோப்பிய ஒன்றியமோ அல்லது ஐக்கிய இராச்சியமோ அல்லது வேறெந்த நாடோ எங்கள் பக்கத்தில் நிற்கும் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது.

இந்தியா எங்களுடன் இருக்குமாக இருந்தால் அனைவரும் எங்களுடன் நிற்பார்கள். நாங்கள் தனியே நிற்க முடியாது. இதனை எல்லோரும் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் ஒருபோதும் தனியே நிற்க முடியாது. எங்களுக்கு உதவி தேவை. எங்களுக்கு உதவக் கூடிய ஒரேயொரு நாடு இந்தியா. மற்ற விடயங்கள் காலப் போக்கில் முறையாகக் கையாளப்பட வேண்டிய விடயங்கள். அதைப் பற்றி நான் தற்போது பேச விரும்பவில்லை என்றார். (ச-5)

# இலகு...

கலுக்கு சுமூக தீர்வை ஏற்படுத்திய பின்னர் இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழக எம்.பிக்கள் பதவி விலகும் தீர்மானத்தை கைவிடுவதாகத் தமிழக முதலமைச்சர் கருணாநிதி உறுதியளித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதுவருடன் மத்திய அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பான முழு விபரங்களையும் நான் அவருக்கு எடுத்துக் கூறினேன்.

இதன்போது தமிழ் மக்கள் குறித்த மத்திய அரசின் கரிசினை வெளியிடப்பட்டதையும் நான் அவருக்குச் சுட்டிக்காட்டினேன். இது தொடர்பில் அவர் தனது திருப்தியை வெளியிட்டார்.

இதையடுத்து தி.மு.க. எம்.பிக்கள் பதவி விலகும் தீர்மானத்தைக் கைவிடுவதற்கும் சம்மதித்தார். இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தின் மூலம் மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துள்ளோம்.

அண்டை நாடென்ற வகையில் இலங்கைக்கு இலகு ரக இராணுவத் தளபாட உதவிகளை இந்தியா வழங்கி வருகின்றது. இவ் உதவியின் கீழேயே ராடர் உள்ளிட்ட கண்காணிப்புக் கருவிகளையும் வழங்கியுள்ளோம். எனினும் இலங்கை இராணுவத்திற்கு எந்தவித இராணுவப் பயிற்சிகளையும் இந்தியா வழங்கவில்லை என்றார். (ச)

# கிளிநொச்சியில் இருப்பவர்கள்...

பொதுமக்களுக்குச் சில கஷ்டங்கள் இருப்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அவற்றை நாம் குறைக்க வேண்டியுள்ளது. கிளிநொச்சியில் தற்போது பொதுமக்கள் இல்லை.

அவர்கள் எமது தாக்குதல் எல்லைக்கு அப்பால் புலிகளின் பிரதேசத்திற்குள் சென்றுவிட்டனர்.

யாராவது அங்கு இருப்பார்களே யானால் அவர்கள் விடுதலைப்புலிகளே என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் புதுடில்லியும் கொழும்பும் உண்மையான நண்பர்கள் என்று தெரிவித்துள்ள அவர், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்புக்களைக் குறைந்த மட்டத்தில் பேணிவருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பசில் ராஜபக்ஷ எம்.பி. அந் நாட்டின் அமைச்சர்கள் மட்டத்திலான உயர் மட்டக் குழுவினரைச் சந்தித்தபின்னர் ஐ.ஏ.என்.எஸ். செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்திச் சேவைக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கில் இடம்பெறும் யுத்தத்தினால் இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் தற்போது பெய்து வரும் பருவ மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது. இரு நாடுகளும் மிகவும் உண்மையான தோழமையுடன் செயற்படுகின்றன. இரு நாட்டிலுள்ள பொதுமக்களும் அவ்வாறேயிருக்கின்றனர்.

இந்தியா, இலங்கைக்கு ஒரு சிறந்த நண்பன் என்பதை நிரூபித்துள்ளது. அத்துடன் இலங்கையிலுள்ள பிரச்சினையையும் நன்றாக விளங்கிக் கொண்டுள்ளது.

யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்பிற்காக எம்மால் முடியுமான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்பதில் நாம் தெளிவடைந்துள்ளோம்.

இது விடயமாக இந்திய உயர் மட்ட அதிகாரிகளுடனும் நாம் கலந்துரையாடினோம். நாம் மனித அழிவுகளைப் பூச்சிய நிலைக்குக் கொண்டு வர வேண்டும் அல்லது மிகக் குறைந்த மட்டத்திற்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

அங்கு பொதுமக்களுக்குப் பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்றன. அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதனை நாம் குறைக்க வேண்டியுள்ளது. இப்போது கிளிநொச்சியில் பொதுமக்கள் இல்லை.

அவர்கள் தாக்குதல் நடைபெறும் எல்லையைத் தாண்டி விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் சென்றுவிட்டனர். கிளிநொச்சி நகர்ப் பகுதியில் வைத்தியசாலையைத் தவிர வேறு அரச அலுவலகங்கள் எதுவும் தற்போது இயங்கவில்லை. அனைத்துப் பொதுமக்களும் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

அப்படி யாராவது அங்கிருப்பார்களேயானால் அவர்கள் விடுதலைப்புலிகளே ஆவர். முல்லைத்தீவு மக்கள் இன்னமும் தங்கள் வீடுகளில் இருக்கின்றனர். ஆனால் அவர்களிடம் கொள்வனவு செய்யக் கூடிய சக்தி இல்லை.

உணவுப் பங்கீட்டு அட்டைகளை வழங்குவதற்காக அவர்களை நாம் உள் நாட்டில் இடம்பெயர்ந்தோர் என அழைக்கின்றோம். தவிர மன்னார் மற்றும் கிளிநொச்சி மக்களே தற்போது இடம்பெயர்ந்துள்ளனர் என அவர் மேலும் கூறினார். (ச-5)

# அனைத்...

பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்த விபரங்கள் தமிழர்களுக்கு திருப்தியளிக்கவில்லை.

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் இந்திய அரசு இலங்கைக்கு ஆயுத உதவி செய்யக் கூடாது என்றும் தமிழக அனைத்துக் கட்சிகள் செய்துள்ள முடிபு குறித்து பிரணாப் முகர்ஜி எதுவும் கூறாதது தமிழ்நாட்டு மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையளித்துள்ளது. (ச-5)


# மனமார்ந்த நன்றிகள்



யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஹொக்கி அணிகள் தேசிய மட்ட ஹொக்கி சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனைத்து ஒழுங்குகளையும் இலவசமாக செய்து தந்த சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது கல்லூரி சமூகத்தின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணக் கல்லூரி
சமூகம்,
வட்டுக்கோட்டை.

(c-1724)


# இலங்கை நிலைவரம் தொடர்பான...

அழுத்தங்களைக் கொடுத்துள்ளது.

இந் நிலையில் ஜனாதிபதியின் சிறப்புத் துதுவராக பசில் ராஜ பக்ஷ எம்.பி. மேற்கொண்ட இந் திய விஜயத்தின் பின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் சாதகமான இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக இலங் கையும் இந்தியாவும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றன.

இதன் உத்தியோகபூர்வமான தகவல்கள் எதிர்க்கட்சிக்குக் கிடைக்கவில்லை. இருந்த போதிலும் எமக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களின் அடிப்படையில், வெளியிடப்பட்டிருக்கின்ற கூட்டறிக்கையானது எவ்வாறான தெளிவுகளை சுட்டி நிற்கின்றது என்பது புரியாதிருக்கின்றது.

இராணுவ நடவடிக்கையில் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதிருப்பதை அரசாங்கம் உறுதி செய்துள்ளதாகக் கூறுகின்றது. மறுபுறத்தில் அதிகாரங்களைப் பகிர்ந்து சமா தானப் பாதையை உருவாக்கும்படி இந்தியா கோரியிருக்கின்றது.

தமிழக முதல்வர் கருணாநிதியோ தமிழக அரசு முன்வைத்த கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்துள்ளதாகவும் அதேவேளை அந்த உறுதிப் பாட்டில் தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்ற பொதுவான கோரிக்கை ஒன்று இந்திய மத்திய அரசாங்கத்திடம் முன்வைத்த சமயத்தில் இரு நாடுகளும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒரு தெளிவற்ற தன்மையையே தோற்றுவித்திருக்கின்றது.

இந்தியா யுத்தத்தை நிறுத்துமாறு கோருகின்றதா? அல்லது அதனைத் தொடருமாறு ஊக்குவிக்கின்றதா? இலங்கை அரசாங்கம் யுத்தத்தைத் தொடரப் போகின்றதா? அல்லது சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் சென்று ஒரு அரசியல் தீர்வை முன்வைக்கப் போகின்றதா? என்பதை மக்களுக்கும் நாட்டுக்கும் பகிரங்கமாக அறிவிக்குமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

தேசியப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்துத் தெரியப்படுத்த வேண்டியது கட்டாய கடமையாகும். இதனைமூடிமறைக்க முயலக் கூடாது என்றார். (ச-5)

# இலங்கை...

வருவதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

அங்குள்ள சில அமைப்புகள் தமது கிளைகளுக்கூடாக இந்தியாவின் சகல பகுதிகளிலும் நிதி மற்றும் பொருள் உதவிகளைக் கோரி வருவதாகவும் கூறப்பட்டது. (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.